# திசைமானி

## ஒன்று கூடிய பயணம்

பாதை - 2 பயணம் - 4 பிப்ரவரி - 2015



**பூலோக சொர்க்கம்**

**வகுப்பறையில் அறிவியல் நாடகம்**

Azim Premji Foundation

Puducherry District Institute



## ஜேனஸ் கோர்ச்சாக் பேசுகிறார்

குழந்தைகளின் பைகளையும், இழுப்பறைகளையும் பெரியவர்கள் தயக்கத்தோடும் விருப்பற்றும் பார்க்கின்றனர். அவர்களிடம் இருக்கும் படங்கள், தபால் அட்டைகள், சரங்கள், ஆணிகள், கூழாங்கற்கள், மணிகள், வண்ணமிகு கண்ணாடிச் சில்லுகள், ஸ்டாம்ப், பறவைகளின் சிறகுகள், பைன்மர கூம்புகள், ரிப்பன், பஸ் டிக்கெட், நீண்ட நாள் பாதுகாக்க முடியாத சில பொருட்கள் ஆகிய அனைத்தையும் பார்க்கலாம். ஒவ்வொரு சிறு பொருளுக்கம் ஒருவரலாறு இருக்கும். அவை கடந்த காலத்து இனிய நினைவுகளாவும், எதிர்கால ஏக்கங்களாகவும் இருக்கக்கூடும்.

*"ஒரு சிப்பி கடற்பயணக்கனவை" குறிப்பதாயிருக்கும்*

*ஒரு திருகாணியும் சிலகம்பிகளும் "விமானத்தில் பறப்பதான கனவாய்" இருக்கலாம்.*

*எப்போதோ உடைந்துபோன பொம்மையின் கண்கள் ஆசை ஆசையாய் வைத்திருந்ததின் ஞாபகச்சின்னமே.*

கோபம் அல்லது மோசமான மனநிலை போன்ற எதிர்பாராத தருணங்களில் உணர்விழக்கும் பெரியோர், குழந்தைகளின் புதையல் குவியலை தூர எறிந்து விடுவதுண்டு. ஏனெனில் அவை பைகளைக் கிழிக்கும், இழுப்பறைகள் நிரம்பி வழியும் என்பதால், மற்றவர்களின் உடைமைகளை இதயமற்று இவ்விதம் கையாள்வதா? குழந்தை எந்த ஒருவருக்கும் அல்லது எந்த ஒன்றுக்கும் மரியாதை கொடுக்க வேண்டுமென எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? அவை குப்பைக் கூடையில் போய்ச் சேரவேண்டிய வெற்றுத்துண்டுக் காகிதங்கள் மட்டுமல்ல; நேசத்துடன் பாதுகாக்கப்பட்டு வந்தபொருட்கள் மட்டுமின்றி, அற்புதமான ஒருவாழ்க்கையின் கனவுகளுமாகும்.

பல ஆண்டுகால கற்பித்தல் களப்பணிக்குப்பின் எனக்கு மேலும் மேலும் வெளிப்படையாகத் தெரிவது என்னவெனில், குழந்தைகள் மரியாதை, நம்பிக்கை, அன்பு ஆகியவற்றைப் பெறுவதற்கு உரியவர்கள் என்பதே. கலகலப்பான சூழலில் சிரிப்பும் கும்மாளமாகவும், கபடமற்ற, நேசமிகுந்த மகிழ்வான உணர்வுமிக்க அவர்களுடன் பணியாற்றுவது ஆனந்தமே! ஆக்கப்பூர்வமான, கிளர்ச்சியூட்டும், ஆனந்தமான நல்லபணி.

# தலையங்கம்

"ஆழமான அறிவுடன் இணைந்த தேடல்களும், செயல்பாடுகள் மட்டுமே தனி நபரை மனிதர் என்பவராக்குகிறது. அதுவே அவரை தொடர்ந்து அறிவார்ந்த விசாரணைக்கு உந்தித்தள்ளுகிறது. அதோடு, அத்தேடலின் முடிவை இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொருவருக்குமென, இவ்வுலகத்திற்கே திரும்பத் தருகிறது". **– பாவ்லோ பிரெய்ரே, ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி முறை.**

நம் பள்ளிகள் அத்தகையே அறிவார்ந்த தேடலுக்கான பயிற்சியை மாணவர்களிடத்திடல் விதைக்கிறது. எப்படியெனில், மாணவர்கள் இங்கேதான் தொடர்ந்து புதிய புதிய திட்டங்களுடன் உறவாடுபவராகவும் புரிந்து கொள்பவராகவும் மட்டுமிடன்றி அத்திட்டங்களை கேள்விக்குட்படுத்தி புதிய திட்டங்களை உருவாக்குபவராக மாறுகிறார்கள்.

இந்த 'திசைமானி' இதழும் அத்தகைய அறிவார்ந்த செயல்பாடுகளை தங்கள் வகுப்பறையில் செயல்படுத்திய ஆசிரியர்களின் அனுபவங்களைத் தாங்கியிருக்கிறது. அட்டைப் படத்தை அலங்கரிக்கும் கட்டுரையான 'பூலோக சொர்க்கம்' மாணவர்களுக்குப் பிடித்த நாடகத்தின் வழி அறிவியலை கற்பித்த அனுபவத்தைப் பேசுகிறது. மகிழ்ச்சியோடு மட்டும் தொடர்புடையதாய் இல்லாமல், நம் வாழ்க்கைச் சூழலில் 'அறிவியல்' எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகிறது. என்ற விவாதத்தை முன் வைக்கிறது. மேலும் இரண்டு கட்டுரைகள் ஆங்கிலப் பாட வகுப்பறை அனுபவத்தைப் பேசுகிறது. 'நானே செய்வேன் ! நானே கற்பேன்!!' எனும் கட்டுரையின் துணையாகக் கொடுக்கப்பட்டுள்ள 'யானை எங்கே?' எனும் சுவரொட்டி உங்கள் மாணவர்களின் கற்பனையைத் தூண்டுவதாக இருக்கும். அதைக்கொண்டு உங்களின் ராகத்துடனும், உடல் அசைவுகளுடனும் பல்வேறு விதமாய் செயல் படுத்துங்கள்.

மாணவர்களின் கேள்விகள், பார்வைகள் அடிப்படையில், நீங்கள் வடிவமைக்கும் பாடதிட்டத்திற்கு உதவி செய்யும் பல புதிய வரவுகளான புத்தகங்களை 'ஆசிரியர் வள மையத்தில்' எடுத்து பயன்படுத்தலாம். சிறிய அளவே நேரம் ஒதுக்கி 'திசைமானி' பற்றிய உங்கள் கருத்துக்களை எங்களுக்குத் தெரிவிக்க மறந்துவிடாதீர்கள்.

ஆனந்தமாய் வாசிப்போம் ! ஆழ்ந்த புரிதலுடன் கற்பிப்போம் !!

**திசைமானிக்குழு**

---

# EDITORIAL

"For apart from inquiry, apart from the praxis, individuals cannot be truly human. Knowledge emerges only through… hopeful inquiry human beings pursue in the world, with the world, and with each other." - Paulo Freire, Pedagogy of the Oppressed

How can schools trigger this kind of inquiry help students engage with ideas, understand them, question them and develop their own ideas? This issue of Thisaimaani brings you some experiences of your fellow teachers in creating such an environment in their classroom.

The cover article 'Paradise on Earth - Science Drama in Classroom' narrates the experience of a teacher in making science learning interesting through the use of drama in the classroom. Not only does it make science learning fun, but also creates sufficient opportunity for making students discuss and debate real life issues. You will find two articles on making English learning more engaging and interactive for students. The article on 'Creating Ownership in the Classroom' carries an attractive poster on 'Where is the Elephant?' that will definitely tickle your students' imagination. Do experiment with your own tunes and actions….you can also add many more extensions to the activity - going back to our discussion on 'continuing inquiry'.

If you are looking for resources to stimulate your students' thinking, the section on new arrivals gives you a peek into the kind of resources you will find at the Teacher Resource Center. Please feel free to drop in find a book of your interest, steal some moments of quiet reflection and leave us your invaluable feedback

Happy Teaching! Happy Learning!

**Team Thisaimaani**

# உள்ளடக்கம்

1. பூலோக சொர்க்கம் – வகுப்பறையில் அறிவியல் நாடகம் – இரா. அனிதா
Paradise on Earth - Science Drama in Classroom 3

2. வகுப்பறையில் வாசிப்பு இடர்பாடு உள்ள மாணவர்களை கண்டுபிடித்தல் – வி. ஜார்ச் பெர்னான்டஸ் 10
Identifying Dyslexic Students in the classroom.

3. அன்றாட பொருள்களின் மூலம் ஆங்கிலம் கற்பித்தல் – கே. ஆதிரை 13
Using Authentic Materials to teach English Language in Primary Class

4. கைவினை பொருட்கள் வழிகற்றல் கற்பித்தல் – ம. சாந்தகுமாரி 16
Teaching and Learning through Handicrafts

5. நானே செய்வேன் ! நானே கற்பேன் !! – ச. குணசெல்வி 21
Creating ownership in the classroom

6. பள்ளி சூழலில் – எளிய முறையில் ஆங்கிலம் – வி. இராமநாதன் 26
Easy English - Creating English Rich Environment in School

***Teacher 's Reflection - Most Memorable Moment as a Teacher***

1. என் ஆசிரியப் பணியில் மறக்கமுடியாத நிகழ்வு . . . – அ. பச்சைநாயகம் 30

2. என் ஆசிரியப் பணியில் மறக்கமுடியாத நிகழ்வு . . . – ர. சங்கர் 32

**Please Note :** *The views expressed in the articles are those of the authors and of the organization they represent. Care has been taken to verify the accuracy and reliability of the content to a certain measure. We recommend readers to verify any information and exercise judgment about the suitability of the ideas to their context. Products, services and organizations mentioned in the articles are not necessarily endorsed by Thisaimaani.*

Cover page & Illustration : S. Varadarasu



# பூலோக சொர்க்கம் - வகுப்பறையில் அறிவியல் நாடகம்

**இரா. அனிதா,** அருட்செல்வி ஆயி அம்மாள் அரசு நடுநிலைப்பள்ளி,
முத்திரையர்பாளையம்

பள்ளிக்கூடத்தில் கற்றல் – கற்பித்தல் நிகழ்வு பல்வேறு முறைகளில் பல்வேறு நிலைகளில் தொடர்ச்சியாக நடக்கின்ற நிகழ்வு என்பதற்கு உதாரணமாக உருவாகியது தான் இந்த அறிவியல் நாடகம். அறிவியல் தின விழாவிற்கான அறிவியல் நாடகப்போட்டி நடப்பதாக எங்கள் பள்ளிக்கு ஓர் சுற்றறிக்கை வந்தது. தலைமை ஆசிரியர் இந்த பொறுப்பை அறிவியல் ஆசிரியரான என்னிடம் அளித்து, குழந்தைகளை நாடகத்திற்குத் தயார் செய்து, கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். எனது முதல் குறிக்கோள் நாடகத்திற்கு மாணவிகளைத் தயார் செய்து, போட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று தான் இருந்தது. ஆனால் நாடகம் உருவாகும்போது பல மாற்றங்கள் அடைந்தது எனக்கு இந்த நாடகம் ஒரு புதுவிதமான அனுபவத்தையும் கற்றலையும் அளித்தது.

நாடகத்திற்கு எட்டாம் வகுப்பைத் தேர்ந்தெடுத்தேன். நாடகப் போட்டி என்ற செய்தியை நான் வகுப்பறையில் அறிவித்தவுடன் குழந்தைகளிடம் இருந்து நல்ல வரவேற்பு கிடைத்தது. எனக்கு நாடகம் எழுதுவது என்பது இதுதான் முதல்முறை. சுமார் இரண்டு நாட்கள் பல தலைப்புகளில் யோசனை செய்து முடிவில் சக ஆசிரியை ஒருவரின் உதவியுடன் இரண்டு பக்கத்திற்கு ''அறிவியல் விழிப்புணர்வு'' என்ற தலைப்பில் ஒரு கதையை உருவாக்கினேன். இந்த கதையின் முக்கியமான பாத்திரங்கள் அரசி, குறவஞ்சி மற்றும் தலைமை அமைச்சர்.

கதையை வகுப்பறையில் கூறி, விருப்பம் உள்ளவர்கள் பெயர் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டேன். நான் எதிர்பார்த்ததைவிட அதிகமான குழந்தைகள் நாடகத்தில் நடிப்பதற்கு விருப்பம் தெரிவித்தனர். ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் ஒன்றிற்கும் மேற்பட்ட குழந்தைகள் விருப்பம் தெரிவித்தனர். இப்படி முழு வகுப்பறையும் நாடகத்தில் பங்குபெற விருப்பம் தெரிவித்ததால் எனக்கு ஒருபுது யோசனை தோன்றியது. பாடப்புத்தகத்தில் உள்ள கருத்துகளை குழந்தைகளின் உதவியுடன் நாடகத்தில் சேர்க்க வேண்டும் என்று முடிவெடுத்தேன்.

அறிவியல் விழிப்புணர்வு நாடகத்தின் கதைக்கு, ஏழாம் மற்றும் எட்டாம் வகுப்பு பாடப்புத்தகங்களிலிருந்து என்னென்ன கருத்துக்கள் சேர்க்க முடியும் என்பதை எழுதிக் வரும்படி கேட்டுக்கொண்டேன். பிளாஸ்டிக் கழிவுகளால் வரும் பாதிப்பு, நீர் மாசுபாடு, மக்கா கழிவுகளால் வரும் பாதிப்பு, வேதிகழிவுகளால் வரும் பாதிப்பு, மின்சார சிக்கனம் என்று பல தலைப்புகளில் தகவல் சேகரித்து வந்தனர். மாணவிகள் கொண்டு வந்த கருத்துக்களை இணைத்ததும் கதை வளம் பெற்றது புதிய கதாபாத்திரங்கள் சேர்க்கப்பட்டு நாடகம் விரிவடைந்து, நாடகத்திற்கு அறிவியல் விழிப்புணர்வு என்ற தலைப்பை மாற்றி 'பூலோக சொர்க்கம்' என்ற தலைப்பு சூட்டப்பட்டது. நிறைய மாணவிகள் விருப்பம் தெரிவித்ததால் மாணவிகளைப் பாத்திரங்களுக்கு ஏற்றவாறு தேர்ந்தெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டது. அதனால் ஒரு நிபந்தனை விதித்தேன். விருப்பம் தெரிவித்த மாணவிகள் கதாபாத்திரத்திற்கு தேவையான உரையாடல்களை (Dialogues) மனப்பாடம் செய்து நடித்துக் காட்ட வேண்டும். அதன் பிறகு நன்றாக நடித்த ஒருவர் ஒரு பாத்திரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். கதையின் நாயகியான அரசி பாத்திரத்திற்கு ஏழு மாணவிகள் விருப்பம் தெரிவித்திருந்தனர், அது போல் குறவஞ்சிக்கு நான்கு மாணவிகள் விருப்பம் தெரிவித்திருந்தனர்.


வகுப்பறையில் அனைத்து மாணவிகளின் முன்னிலையில் அவர்கள் நடித்துக்காட்டினர். அவர்களின் அனைவரின் நடிப்பும் திறமையும் அற்புதமாக இருந்தது. ஜனநாயக முறைப்படி அதிகமான வாக்குகளை பெற்ற மாணவிகள் பாத்திரங்களுக்கு தேர்வு செய்யப்பட்டனர். நாடகத்தில் இடம் கிடைக்காத மாணவிகளும் இது “எங்கள் வகுப்பு நாடகம்” என்ற உணர்வுடன் பல உதவிகள் செய்தனர். வகுப்பறையில் இரண்டு முறையும், பள்ளி முடிந்த பின் நான்கைந்து முறைகள் என்று இரண்டு வாரங்களில் நாடகம் பொலிவுடன் உருவானது. நாடகத்தில் இல்லாத மாணவிகளும் நாடக ஒத்திகை நடப்பதை பார்க்கப் பள்ளி முடிந்தபின்பும் ஆர்வத்துடன் அமர்ந்திருந்தனர்.

பாடப்புத்தகத்தில் உள்ள கருத்துக்கள் மாணவிகளின் மனதில் எளிதில் பதிந்துவிட்டது. நாடகம் உருவாகும் போதும் ஒத்திகை பார்க்கும்போதும் மாணவிகளிடையே நடைபெற்ற உரையாடல்கள் முக்கியமானதாக கருதுகின்றேன். மாணவிகள், அவர்களின் இல்லங்களில் எவ்வாறு மின்சாரம் வீணடிக்கப்படுகிறது; பிளாஸ்டிக் பொருட்களை தவிர்க்க என்ன செய்ய வேண்டும்; நமது பள்ளியை எவ்வாறு சுத்தமாக வைத்துக்கொள்வது

போன்ற உரையாடல்கள் அவர்கள் வாழ்க்கையில் உணர்ந்து கடைபிடிக்க உதவியாக இருந்தது. மாணவிகள் நிறைய கேள்விகள் என்னிடம் கேட்டார்கள். சூரிய மின்விளக்குகளை ஏன் நகர்ப்புறங்களில் அதிகமாக பயன்படுத்தப்படுவதில்லை? பிளாஸ்டிக் பயன்படுத்தினால் பல தீமைகள் உண்டெனில், ஏன் உற்பத்தி பண்ணுவதற்கு அரசு அனுமதி கொடுக்கின்றது? இந்த நாடகம் நடைபெற்றிருக்காவிட்டால் இதுபோன்ற கேள்விகள் எழுந்திருக்குமா! என்பது சந்தேகமே. நாடகத்தைப் படியுங்கள் மீதியை முடிவில் சொல்கிறேன்.

## பூலோக சொர்க்கம்

**காட்சி - 1**




**முரசொலிப்போன்** : டும்! டும்! டும்!

இதனால் அனைத்து மக்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால் நாளை காலை 9 மணிக்கு அரசவைக் கூடுகிறது. அனைத்து அமைச்சர்களும் அங்கே கூடும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். டும்டும் டும்.

**காட்சி - 2**

**இடம் : அரசவை**

**பங்குபெறுவோர்** : அரசி, அமைச்சர்கள், குறவஞ்சி, அரசியின் தோழிகள், வாயிற்காவலன்.



**வாயிற்காவலன்** : இராஜாதி ராஜ, இராஜ மார்த்தாண்ட, ராஜ குலோத்துங்க, ராஜ கம்பீர, ராஜ குல திலக அரசியார் வருகிறார். வருகிறார். வருகிறார்.

**அமைச்சர் 1** : என்ன ? என்ன அரசியா என்ன ஆயிற்று இந்த வாயிற் காவலனுக்கு தவறாகக் கூறியதால் மன்னரிடம் உதை வாங்கப்போகிறான்.

**அமைச்சர் 2** : தவறாக கூறியது அவனில்லை. நீர்தான்! சற்று அங்கே பாரும்.

(அரசியின் வருகை)

**அமைச்சர் 1** : அட, ஆமாம் என்ன! இன்று அரசி அரச சபைக்கு வந்துள்ளார்... ஆளப்போகிறாரோ ?

(அரசி இதனைக்கேட்டு அருகினில் வருதல்)

**அரசி** : என்ன கூறினீர் அமைச்சரே ! பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் ஆள வந்தோம். இந்த நாட்டை ஆண்டுக் கொண்டிருந்ததே இந்திராகாந்தி போன்ற பெண்கள் தான். என்னால் இந்த அரச சபையை ஆள முடியாதா என்ன ?

Its ok it's all in the game... ம்... அனைவரும் அமருங்கள்.

என்ன ? அனைத்து அமைச்சர்களும் வந்து விட்டார்களா ?

சரி அரசவை தொடங்கட்டும்.

**வாயிற்காவலன்** : அரசியாருக்கு வணக்கம். குறவஞ்சி ஒருவர் தங்களைக் காண வந்திருக்கிறார்.

அரசி : வரச்சொல்

குறவஞ்சி : அரசியாருக்கு வணக்கம்

அரசி : ம்...ம்... Why did you come here?

குறவஞ்சி : மன்னிக்க வேண்டும் அரசி எனக்கு ஆங்கிலம் தெரியாது. நான் ஆங்கிலம் பேசுமளவிற்கு படிக்கவில்லை.

அரசி : மன்னிக்கவும் எதற்காக என்னைக் காண வந்தாய் ?

குறவஞ்சி : தங்களுடைய கைகளைப் பார்த்து, தங்களுக்கு நடக்கவிருக்கம் நல்லது, கெட்டதைச் சொல்ல வந்தேன்.

அரசி : குறி சொல்லும் முன்பு எங்கே முதலில் ஒரு பாடல் பாடு பார்ப்போம்.

குறவஞ்சி : அப்படியே ஆகட்டும்

டமுக்கு டிப்பா டிமுக்கு டிப்பா டிய்யாலோ !
ஊசிமணி, பாசி மணி ஆயாலோ !
பவல மணி வாங்கலையோ டிய்யாலோ !
அ ஆ, அ ஆ, அ ஆ
வா சாமி கொக்கிருக்கு
வா சாமி குருவி இருக்கு
ஏன் சாமி வாங்கலையோ டிய்யாலோ
ஊசி மணி, பாசிமணி, ஆயாலோ !
பவள மணி வாங்கலையோ, டிய்யாலோ !
அ ஆ, அ ஆ, அ ஆ
காடை கவுதாரி இருக்கு
காட்டு மைனா இருக்கு
கேட்டா கிடைக்கும் இங்கே டிய்யாலோ !
டமுக்கு டிப்பா, டிமுக்க டிப்பா டிய்யாலோ !
ஊசி மணி, பாசி மணி ஆயாலோ
பவள மணி வாங்கலையோ டிய்யாலோ
அ ஆ, அ ஆ, அ ஆ

அரசி : Wow ! Very nice
எங்கே என் கைளைப் பார்த்து
குறிச்சொல் பார்ப்போம்!

(குறிப்பார்த்துவிட்டு)

குறவஞ்சி : மலையாள பகவதியே !
மனமிறங்கி குறி சொல்லம்மா
ஆபத்து நேரவிருக்கிறது அரசி
தாங்கள் நாட்டுக்கு ஆபத்து
நேரவிருக்கிறது.

அரசி : என்ன ஆபத்தா ! என் நாட்டிற்கு ஆபத்தா !
என்ன ஆபத்தா ? என் நாட்டிற்கு ஆபத்தா யாருக்கு வந்தது அந்த தைரியம் என் நாட்டிற்கு ஆபத்து விலைவிக்க ?

குறவஞ்சி : ஓங்க நாட்டு மக்களால் தான் அரசி உங்கள்நாட்டுக்கு ஆபத்து.

அரசி : என்ன அமைச்சரே ! இந்த குறவஞ்சி கூறுவது உண்மைத்தானா !

அமைச்சர்கள் : ஒன்றும் புரியவில்லையே! அரசி ஒன்றும் புரியவில்லை. இந்த குறவஞ்சி என்ன கூற வந்துள்ளார்! என்று ஒன்றும் புரியவில்லை.

அரசி : ம்.... ம்... சரிமேலும் கூறு.

குறவஞ்சி : நாங்க மலை வாசியாக இருந்தாலும் இந்த நாட்டு மீது எங்களுக்கு அக்கறை உண்டுங்கோ. சூரிய சமைப்பான், சூரிய மின் கலன்களைப் பயன்படுத்துகிறோம். உங்க நாட்டு மக்களோ மின்சாரத்தை வீணாக்கிக்கிட்டு இருக்காங்களே...

அமைச்சர் : அரசி காதில் முணுமுணுத்தார். ஆம்! ஆம் குறவஞ்சி கூறுவது உண்மைதான். நம் நாட்டு மக்கள் மின்னாற்றலை வீணாக்கி கொண்டிருக்கிறார்கள்.

அரசி : ஒரு குறவஞ்சியின் முன் நாட்டின் மானத்தை வாங்குவதா? சற்று அமைதியாக இரு.

குறவஞ்சி : என்ன அரசி ? அமைச்சர் தங்கள் காதில் ஏதோ முணுமுணுக்கிறார் ?

அரசி : That's nothing you continue....

குறவஞ்சி : உங்க அமைச்சர்கள் வீட்டு ரூம்ல AC, வீட்டுக்கு ரெண்டு மூனு நீச்சல் குளம்ன்னு இருக்கு. இதனால் மின்சாரம் வீணாகுது சாமியோ. அது மட்டும் இல்ல அவங்களுக்கு இரண்டு காரு,

நாலு மோட்டார் சைக்கிள் ஓடுது சாமி வேணா, நீங்களே கேட்டு பாருங்க.

அரசி : என்ன இந்த குறவஞ்சி கூறுவது உண்மைதானா ?

(அமைச்சர்கள் விழித்தல்)

அமைச்சர்கள் : அது வந்து அரசி,
அது வந்து அரசி

அரசி : ம்... ம்...

குறவஞ்சி : உங்கள் பாட்டனாரு மாட்டு வண்டியில் போனாரு; நீங்களோ உல்லாசமாக கார்ல போறீங்க, உங்க மகன் ஜெட் விமானத்துல பறக்கறான். ஆனா ஒன்னு சொல்றேன் சாமீ நீங்க பெட்ரோல் சேமிக்கலன்னா, உங்கள் பேரப்பையன் மாட்டு வண்டில தான் போவான்.

அரசி : வேறு என்னத்தான் இந்த நாளில் செய்ய முடியும். போக்குவரத்து வாகனங்களின் பயன்பாடு இன்றியமையாதது மற்றும் தவிர்க்க முடியாதது அல்லவா ?...

குறவஞ்சி : என்ன சாமி இப்படி சொல்டீங்க பயோகேஸ் உற்பத்தி செஞ்சி அத பயன்படுத்தலாம் இல்லையா?

அரசி : ம்... ok you proceed...

குறவஞ்சி : அடுத்து நீங்கள் அனுமதி கொடுத்த தொழிற்சாலைகள் அதிகமான விளைவுகளை உண்டு பண்ணுது தெரியுமா ?

அரசி : என்ன விளைவுகள் ?

குறவஞ்சி : அதிலிருந்து வெளியேபோற கந்தக - டை - ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்ஸைடு போன்ற வாயுக்களால் அமில மழை பெய்யுது. கந்தக - டை - ஆக்சைடால மூச்சுத்திணறல் ஆபத்தும் இருக்கு. அப்புறம் உங்கள் நாட்டு மக்கள் ஏதோ அதுபேருகூட ஜில்லுனு ஒரு பெட்டி மாதிரி பயன் படுத்தறாங்களே...

அரசி : ஓ! பிரிட்ஜை சொல்கின்றாயா !

குறவஞ்சி : ஆமா சாமி ! அந்த பிரிட்ஜ்லிருந்து வெளியேபோற குளோரோ புளோரோ கார்பனால் ஓசோன் அடுக்கு பாதிக்குதாம் சாமி. இதனால் தோல் புற்றுநோய் வர காரணமாக இருக்குதாம் சாமி.

அமைச்சர் : அரசி தேனீர் அருந்துங்கள்.

அரசி : ம்... குறவஞ்சிக்கும் கொடு.

குறவஞ்சி : அய்யயோ எத்தனை சட்டங்கள் போட்டாலும் இதவிடுவதா இல்லையா சாமி ! இது மக்கவும் மக்காதே ! மண் வளத்தை பாதிக்குமே சாமி இந்த பிளாஸ்டிக் கப்பில் இருக்கிற தேனீர் எனக்கு வேண்டாம் சாமியோ.

அரசி : ம்... அமைச்சரே... எனக்கும் வேண்டாம் இந்த பிளாஸ்டிக் கப்பில் இருக்கிற தேனீர். சரி குறவஞ்சி இவ்வளவு நல்ல விஷயங்களை தெரிஞ்சு வைச்சிருக்கியே எப்படி ?

குறவஞ்சி : எங்க வீட்டில் ரேடியோ பெட்டி இருக்குசாமி.. அதுல இதெல்லாம் சொல்றாங்க சாமி.

அரசி : ம்.. சரி உன் நேரம் முடிந்து விட்டது சென்று வா !

(அரசி கைத்தட்டி கூப்பிடுதல்)

அரசி : நம் நாட்டிற்கு நல் வழி கூறிய குறவஞ்சிக்கு பொற்காசுகள் கொண்டு வா

அமைச்சர் : உத்தரவு அரசி

அரசி : பொற்காசுகளைக் கொடுத்தல் இதோ இந்த பொற்காசுகளைப் பெற்று சென்று நீயும் உன் மலைவாழ் மக்களும் நன்றாக வாழுங்கள்.

குறவஞ்சி : அரசியாருக்கு நன்றி !
அரசியார் வாழ்க
அரசியார் வாழ்க

அரசி : கைத்தட்டி, யாரங்கே ?கூப்பிடு அந்த முரசொலிப்போனை

வாயிற்காவலன் : சொல்லுங்கள் அரசி

அரசி : இன்று மாலை 6 மணிக்கு அனைத்து மக்களையும் அரச சபை முன் கூடச் சொல். இது எனது கட்டளை. உடனே முரசறைந்து செய்தியை சொல்.


வாயிற்காவலன் : உத்தரவு அரசி

அரசி : அமைச்சர் அவர்களே... சுற்றுச் சூழல் குறித்து ஆய்வுகள் செய்யப்பட்டது அல்லவா அதன் கோப்புகள் அனைத்தையும் கொண்டு வாருங்கள்.

அமைச்சர் : உத்தரவு அரசி!

காட்சி : 3

பங்கு பெறுவோர் : முரசொலிப்போன்



முரசொலிப்போன் : டும்! டும்! டும்!

இதனால் அனைவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால் இன்று மாலை 6 மணிக்கு அனைத்து மக்களும் அரச சபை முன் கூட வேண்டும். இது அரசியாரின் கட்டளை! கட்டளை! கட்டளை! டும்! டும்! டும்!


காட்சி 4

இடம் : அரச சபை

பங்கு பெறுவோர் : அரசி, அமைச்சர், மக்கள்

மக்கள் : அரசியாருக்கு வணக்கம்.

அரசி : மக்கள் அனைவருக்கம் எனது வணக்கங்கள் நம் நாட்டிற்கு நேரவிருக்கும் ஆபத்துக்களை ஒரு குறவஞ்சியின் மூலம் தெரிந்துகொண்டேன். ஆதலால்



அமைச்சர் : கட்டளை எண் 1

அரசி : மக்கள் டங்ஸ்டன் இழை விளக்குகளுக்கப் பதிலாக LED விளக்குகள் பயன்படுத்தி மின் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும். அனைத்து மின் சாதனங்களையும் முறையாகவும் கவனமாகவும் கையாள வேண்டும். தேவையில்லாத போது மின் விளக்குகள், மின் விசிறிகள் அணைக்க வேண்டும். அரசும் மாற்று ஆற்றல் மூலங்களான சூரிய ஆற்றல் மற்றும் காற்றாலைகள் ஆகியவற்றின் மூலமாக மின் உற்பத்தி செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

அமைச்சர் : கட்டளை எண் 2

அரசி : ஹைட்ரஜன் ஒரு சிறந்த மாற்று எரிபொருள் ஆகும். அது காற்றில் எரியும் போது நீர் உண்டாகிறது. அதனால் காற்று மாசு அடைவதில்லை. ஹைட்ரஜனில் அதிக வெப்ப ஆற்றல் உள்ளது. இதன் தொடர்பாக அறிவியல் அறிஞர்கள் ஆராய்ச்சி செய்ய முன்வரவேண்டும். அரசும் தேவையான உதவிகள் செய்யும்.

**அமைச்சர்** : கட்டளை எண் 3

**அரசி** : பெட்ரோல் / டீசல் சேமிக்க வாகனங்களை சீரான மற்றும் மிதமான வேகத்தில் ஓட்டிச் செல்ல வேண்டும். கூடுமானவரை வாகனங்களைப் போக்குவரத்து சிக்னலில் நிறுத்தி, அவசியம் ஏற்படும் இடங்களில் அணைத்து வைக்க வேண்டும். வாகனங்களை குறித்த காலத்திற்கு நன்கு பராமரிக்க வேண்டும். மேலும் பிளாஸ்டிக் பயன்பாட்டை முற்றிலும் குறைத்துக் கொள்ள வேண்டும். பிளாஸ்டிக் பொருள்களுக்குப் பதிலாக பேப்பர் மற்றும் பயோ பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்த வேண்டும்.

**அமைச்சர்** : கட்டளை எண் 4

**அரசி** : கழிவு நீர் குட்டைகளின் ஓரங்களில் தைல மரங்களை நட்டு வளர்க்கும்படி ஆணையிடுகிறோம். ஏனென்றால் இம்மரங்கள் கழிவு நீரை விரைவாக உறிஞ்சிக் கொண்டு தூய நீராவியை வளி மண்டலத்திற்கு வெளியிடுகிறது.

**அமைச்சர்** : கட்டளை எண் 5

**அரசி** : ஓசோன் படல இழப்பிற்கு காரணமாய் இருக்கும் பொருட்களின் உற்பத்தி, பயன்பாடு மற்றும் வாயு மண்டலத்தில் வெளியேற்றம் ஆகியவை குறைக்கப்பட வேண்டும் முடிந்தவரை வேதிப்பொருட்களை மறு சுழற்சியில் ஈடுபடுத்த வேண்டும். மற்றவர்களுக்கு ஆற்றல் பற்றாக்குறை மற்றும் ஆற்றல் சேமிப்பின் அவசியத்தை எடுத்துக் கூற வேண்டும்.


இவை அனைத்தும் என் கட்டளைகள். உடனே நிறைவேற்றுங்கள்.

**மக்கள்** : அரசியாரே ! உங்களின் கட்டளைகளை நாங்கள் நிறைவேற்றுவோம். இந்த பூலோகத்தை சொர்க்கமாக மாற்றுவோம்.

**காட்சி : 5**

மக்கள் ஆற்றல் சேமிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தல்

மக்கள் ஒருவருக்கொருவர் ஆற்றல் சேமிப்பின் அவசியத்தை எடுத்துரைத்தல்




நாடகம் எப்படி இருந்து ? இந்த நாடகத்தை பள்ளிக் குழந்தைகள் நடித்து காட்டும்போது மீண்டும் மீண்டும் பார்க்கத் தோன்றும். இந்த நாடகத்தை எங்கள் பள்ளி மாணவர்கள் வெற்றிகரமாக நடத்தி முடித்த பின்பும் பல உரையாடல்களும் விவாதங்களும் நடந்தன. இந்த நாடகத்தைப் பார்த்தவர்கள் "ராணியின் வேடம் நன்றாக இருந்தது", 'குறவஞ்சியின் நடிப்பு அருமை", "நல்ல கருத்தை இவ்வளவு எளிமையாக சொல்லிவிட்டார்கள்". "இன்னும் கொஞ்சம் நேரம் கொடுத்திருந்தால் இன்னமும் நன்றாக இருந்திருக்கும்" என்று பல வாழ்த்துக்களும் கருத்துகளும் கிடைத்தன. இதையெல்லாம் விட இந்த நாடகத்தை பார்த்த ஒருவர் கேட்ட கேள்வி எனக்கு பிடித்திருந்தது. என்னிடம் அவர் கேட்டர் "இந்த நாடகத்தையும் அதை பார்த்து ரசித்த பார்வையாளர்களையும் எவ்வாறு இணைக்க முடியும் என்றார் ?" சற்று யோசித்தப் பிறகு நான்சொன்னேன் "நாடகத்தைப் பார்த்தவர்களிடம் நாடகத்தின் மைய கருத்தைப்பற்றிய விவாதம் செய்யலாம்." அவரும் நல்லாயிருக்கு மேடம் என்று போய்விட்டார். ஆனால் அந்த கேள்விக்கு நான் சொன்ன பதில் முழுமையாக உள்ளதா ? எவ்வாறு வகுப்பறையில்இதைசெயல்படுத்த முடியும்? என்ற கேள்விகள் என்னை பின்தொடர்ந்து கொண்டிருந்தது. எனவே நாடகம் முடிந்தபின்பு என்னென்ன தலைப்புகளில் விவாதம் அல்லது உரையாடல் நடத்தலாம் என்று ஒரு

பட்டியலிட்டேன். சில தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து வகுப்பறையில் விவாதம் செய்தோம். இது நாடகத்தை மேலும் வலுப்படுத்தும் விதமாக இருந்தது. நான்தயார் செய்த பட்டியல் கீழே உள்ளது.

1. ஏன் குறவஞ்சி பிளாஸ்டிக் குவளையில் தேனீர் அருந்த மறுத்தாள் ? பிளாஸ்டிக்கினால் வரும் தீமைகள் என்னென்ன ?

2. காற்று, நீர் மற்றும் நிலம் மாசுபடுத்தலை தவிர்க்க நாம் என்ன செய்ய வேண்டும்.

3. ஆற்றல் சேமிப்பிற்காக மத்திய மாநில அரசுகள் செய்யும் முயற்சிகள் எவை ?

4. கார்பனால் ஆன எரி பொருட்களை அதிகமாக எரிப்பதால் வரும் சுற்றுசூழல் பாதிப்புகள் என்னென்ன ?

5. அமில மழையினால் ஏற்படும் விளைவுகள் என்ன ?

6. ஓசோன் அடுக்கில் எவ்வாறு ஓட்டை விழுகின்றது என்பதை பற்றி விவாதம் செய்யலாம்.

7. “மரங்களைக் காப்போம் – வாழ்வைக் காப்போம்” – மரங்களைக் காப்பதினால் எவ்வாறு வாழ்வை காக்க முடியும் ?

8. நம்முடைய எதிர்கால சந்ததியினருக்கு நல்ல சுற்றுச்சூழலை அமைத்துத் தர வேண்டுமானால் எத்தகைய எரிபொருளை நாம் பயன்படுத்த வேண்டும் ?

9. நமது வீடுகளில் பயன்படுத்தப்படும் மின்சார சாதனங்களில் மின்சாரம் சேமிக்க என்ன செய்ய வேண்டும்.

10. சுற்றுச்சூழலை பாதுகாப்பில் பள்ளி மாணவர்களின் பங்கு.

**இந்த நாடகம் மூலம் நான் கற்றுக்கொண்டவை.**

- முதலாவது பள்ளிகளில் நமக்கு கிடைக்கும் இது போன்ற வாய்ப்புகளை எவ்வாறு பாடத்தோடு தொடர்புபடுத்தி இணைப்பது.
- இரண்டாவது ஒவ்வொரு குழந்தைகளுக்குள்ளும் எவ்வளவு திறமைகள் உள்ளது என்பதை இந்த நாடகம் எனக்க சொல்லிக் கொடுத்தது.
- மூன்றாவது குழந்தைகள் அவர்களுக்கு விருப்பமான/விரும்பும் முறையில் எளிதில் கற்றுக் கொள்கின்றனர். மாணவிகளுக்கு வேறு தலைப்புகள் கொடுத்தபோது (உதாரணம் : தூய்மை, நீர் மாசுபாடு) அவர்கள் இந்த நாடகத்தின் பாத்திரங்களை வைத்துக்கொண்டு உரையாடல்களை அவர்களே எழுதி நடித்து காட்டினார்கள்.
- நான்காவது, நாடகத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லாத என்னை ஒரு இயக்குனராக மாற்றியது இந்த நாடகம். இன்னும் நிறைய பேச வேண்டும் என்று உள்ளது நேரில் பார்க்கும்போது சொல்றேன் சாமியோ...



# Identifying Dyslexic Students in the Classroom

**George Fernandez .V**
Co-ordinator, SSA, Puducherry.

As teachers, we are all aware that children learn at different paces - there will be fast and slow learners. But some students might not just be slow in learning, but could also be battling a specific learning disability that needs special care and attention. Among the various learning disabilities, Dyslexia manifests primarily as a difficulty with reading and spelling, listening and speaking, and written expression.

During the year 2008-2009, we had attended a training conducted by STC, Education Department, on "Dyslexia". This training motivated us to identify dyslexic students in the school and provide them with remedial measures to improve their performance in the classrooms.

**The main objectives of the study were :**

- To identify the dyslexic students by comprehensive test & sustained observation over a period of time.
- Conducting Pre-Test and Post Test for dyslexic students.
- Imparting adequate training for the students to develop sensory motor skills.

**How to identify students with dyslexia?**

A teacher has to continuously observe his/her students inside and outside the classroom for signs of dyslexia. Teachers could look out for the following symptoms to identify dyslexic students.

**Reading problems :** slowness, hesitancy, omission, substitution, reading by guessing, reading the words backwards (on for no), misreading (put for but).

**Writing problems :** slowness, lack of regard for even basic rules of grammar such as capitals and full stop, poor handwriting, poor organization of the writing space, poorly formed letters, words, and sentences.

**Spelling problems :** writing letters in wrong order, reversal of letters (b for d), inversion of letters (u for n), mirror writing (no for on), omission (wet for went); these are best elicited by asking the child to write to dictation.

In addition, they may have problems related to ***fine motor skills, right - left orientation, and sequential learning.***


Although the above mentioned symptoms are helpful in identifying dyslexia, it is important to avoid labelling the child dyslexic without consulting a specialist. For a thorough assessment of dyslexia, we must get a developmental, medical, behavioral, academic and family history of the child and a measure of the general intellectual functioning and language skills. The testing may be done by a single individual or a team of specialists. There is no single test which can be used to identify dyslexia, instead a battery of tests need to be administered.

Some examples of questions to assess :


I. The general problem solving ability.

II. Tests of reading and spelling, particularly word level processes

1. Fill in the Missing Pieces



2. Word sounds To ask children to identify the picture that begins with a particular sound. E.g.: /s/ , /k/




3. Spelling Test - To identify the spelling by looking at the word.

   E.g.: String is spelt as :


   | strong | string | wrong | sing |
   |---|---|---|---|

4. Visual search -

   i. To identify Matching shape

   ii. To identify the direction - Eg. Mark the downward arrow.

5. Identification of alphabets - Circle the letter b

6. Match each picture with its starting alphabet

| | |
|---|---|
|  | g |
|  | b |
|  | f |
|  | p |
|  | d |

7. Copy Writing -

   i. Write the following letters:
   b, d, g, f, p ——————


   ii. Write the following paragraph given below:

   The Balloon Man

   He always comes on market days
   And holds balloons a lovely bunch.
   And in the market square he stays,
   And never seems to think of lunch.

Simple tests can be done to assess a student's psychomotor skills. Psychomotor skills include the ability to do coordinated muscular movements with precision. These tests are :

i. Catching and throwing a ball
ii. Walking on a straight line
iii. Riding a bicycle



**Remedial Approaches**


Students with dyslexia need to be taught at a pace they are comfortable with. They must be given sufficient time for practice and to respond to questions. The training imparted must be structured and sequenced from simple to complex. It is good to ensure that the child has thoroughly mastered a particular stage before moving on to the next one. The trainings must include a multi sensory approach that involves vision, hearing and touch.

In this study, the students were imparted with a variety of training and activities to develop their language skills, motor and auditory skills and

motivate them. Few of the activities are listed below:

- Students were trained to identify alphabets with the **sense of touch.** They were made to write letters on rice, sand, sand paper, cello tape and colored clays. They were also made to model the alphabets with clay to feel the shape of the alphabet. **Drawing and painting** are also good methods to develop their fine motor skill.

- Using **water balloons and water pistols** - Alphabets were written on the blackboard and the students were asked to throw water balloons when the teacher pronounces the particular letter. This helps the student recognize the sound of the letter and differentiate between the alphabets.




- Adequate **physical exercises** were conducted to develop coordination and kinesthetic ability. Students were given opportunities to develop their abilities to throw, catch and kick a ball. **Yoga and Meditation** sessions helped improve their concentration levels.

- Students were also given training using **computers** available in the school. They learnt to type letters and words using MS Word and verify basic arithmetic operation in MS Excel. Digital Learning Resources were used to teach a few lessons. Phonetic software were used to coach their development of sound and develop their listening skills.

- **Music** is a powerful medium for auditory training. Students were taught to sing songs and rhymes that helped improve their pronunciation, and intonation. Students were told the **stories and lives of great achievers** who were dyslexic in their childhood. Anecdotes from their lives as to how they overcame obstacles inspire students to face life and challenges that come their way.

- Gardening is a good physical activity and also helps develop sensitivity towards nature in students. With that intention, a **herbal garden** was created in the school compound and the children grew various herbal plants, watered and nurtured them regularly. This aided in bringing all the students together as they collectively worked towards establishing a herbal garden.

Efforts were taken to ensure that no child was isolated in the classroom. Activities were designed in such a way that all children would joyfully take part in it and learning was guaranteed for all. These activities showed to have a positive impact on the students and in their ability to identify alphabets and learn the language. It also showed significant improvement in their learning ability and attitude.

**Reflections :**

A student suffering from dyslexia is in no way less intelligent than any other normal student in the class. The child has a genuine difficulty in learning and is not lazy or uninterested. When one identifies such a student in the classroom, the teacher can offer adequate support and motivate the student to learn better. It is important to engage the child in simple tasks initially to boost their sense of achievement. Many such children would be creative and hence they should be given opportunities to use and express their creativity in their learning. Parents also need to be made aware that dyslexia is not a disease but a learning disorder which can be overcome by providing support to the child.

The students of our school who showed symptoms of dyslexia were trained with utmost care and they were rejuvenated by this project. The multi - sensory trainings imparted to them were useful to improve their concentration levels. There was a change in their learning ability and attitude. The training also helped students overcome their initial learning struggles and there was an improvement in their academic performance. It is suggested that such projects be periodically carried out in schools for the students' overall development.



# Using Authentic Materials to teach English Language in Primary Class

**Adirai .K**
G.P.S., Kirumampakkam

In my career as a Primary School Teacher, I have often wondered why my students were not speaking in English and were so eager to lapse into Tamil. For me, taking classes was a big challenge as I had to use my home language to teach. I tried out various methods but despite my efforts, my students always answered in monosyllables and generally got scared of English classes. Thiswas when I thought of doing something different.

I realized that children need to be exposed to a language-rich environment to achieve a reasonable level of competency in English.

Language-rich environment is a 'setting in which a child is surrounded by talk and has plenty of opportunities to communicate with others'. This usually happens at home where children learn to speak their mother tongue. But how to create a similar environment in the classroom that would help students develop communicative skills in English?

**Language - rich Environment**

I started using interesting classroom materials to teach English. Initially, I prepared different types of charts and hung them around the class. The children saw the charts and gradually began to recognize and read the words written on them quite fluently. But when it came to using words in context they floundered. This was when the idea of using authentic materials to teach English as a second language (ESL) struck me.

**Authentic materials**

What exactly are authentic materials? These are resources (texts and materials) that are created to help students use language in real-life situations and not simply for language teaching purposes. They are effective in teaching because :

- They motivate students to learn.
- They provide authentic information on certain subjects.
- They expose the students to real language situations.
- They make classroom teaching and learning more creative and interactive.

Along with textbook-oriented materials like charts and flash cards, I also began using authentic resources like oil containers, soap wrappers, empty shampoo bottles and children's magazines to develop communicative competency in my students.

**Photos from the surrounding**

**Objective :** To help children relate words to the photos and develop vocabulary in a meaningful way.

**Procedure :**

- I pasted photos of cars, vegetables and festivals along with the corresponding words on classroom walls.
- The children saw the photos and gradually were able to recognize and read the words fluently. This went on for a few weeks.
- By pointing at certain photos, I asked the children questions like :
  - "Do you like cars or buses?"
  - "Which is your favorite festival?"
  - "Which are vegetables that your mother uses for making sambar?"
- The children answered the questions by pointing at the appropriate pictures and talked about their experiences related to the objects in the photos.

**Benefits :**

- By doing this activity, I remarked that children looked more relaxed in class and spoke about their experiences.

- Learning was more joyous and took place at a child's own pace.

There were, however, many children who did not participate in the photo activity so I had to come up with interactive methods of teaching to develop their communicative skills and interest. For this, I used the following approach :

- For children who loved poems, I introduced rhyming words through an action song called 'Team work' from the textbook. The students answered many questions based on the rhyme and became familiar with the words.

- For some others, I used pictures of body parts with the corresponding vocabulary. The children had to match them and answer questions on some of them like, “How do you rinse your mouth?” or “How do you wash your hair?”

**Puppets**

Puppets could become effective teaching-aids for developing communicative competencies in children when integrated into conversations or dialogues.

**Finger Puppets :**

**Objective :** Use of finger puppets to teach children about family members.

**Procedure :**

- I made a few simple finger puppets, coloured them and made a bit of art work to make them look like father, mother, brother sister and soon.

- I showed them to the children by asking questions on who they were and whether they had some of their relatives living close by. I also asked them to describe some of them. This made the class enjoyable and interesting. Lot of talk happened and the children wanted to show the puppets to their friends.



- I also showed them how easy it was to make the finger puppets by using paper, sketch pens and a bit of glue. The children warmed up to me and began making their own puppets and used them to converse with their friends.

**Benefits :**

- Children learned about family relations in an interactive manner.

- The children made their own puppets and their creativity developed.

**Stick Puppets (Smiley) :**

**Objective :** Use of stick puppets with smileys to help children express emotions and learn about expressions.

**Procedure :**

- As an extension of the finger puppet activity, I used stick puppets with smileys pasted on them to teach vocabulary of sentiments.

- The smileys taught children, amongst a hundred other terms, words pertaining to different facial expressions like sadness, surprise, happiness, fear and anger.

- I helped students create dialogues between the different puppets like :
    - “Why are you sad?”
    - “My mother is ill!”
    - “I am happy because I bought a ball.”
    - “You are looking tired.”
    - “Yes, I played football.”

**Benefits :**

- The use of smiley puppets helped develop my students' questioning and answering skills and made the class more interactive as children talked about their emotions and sentiments.

**Children's Magazines**



Children's magazines are seen in every book shop and stall around town but how many of us really think of using

them to teach English? If used properly, magazines could become an effective medium to teach communicative functions to children.

**Objective :**

- To help children talk about the pictures on a magazine page.
- To help students develop vocabulary and simple grammar structures for communicative purposes.
- To develop reading skills in children through peer activity.

**Procedure :**

- I divided the class into small groups.
- I gave children's magazines with bright illustrations to each group.
- Each group had to choose a picture from the magazine and say a simple sentence about it.
- Initially the children used phrases like "The sky is blue," or the "The grass is green…"
- Slowly I went around the class and asked the students to talk about other things from the picture.
- The students began saying many more sentences to each other and an interactive group activity took place.

**Benefits :**

- Communicative skills of students improved through peer learning.
- Colourful magazine pictures motivated students to talk more freely.

**Masks**

Children very often find it difficult to formulate questions. How to help them improve their questioning skills by using when, where, what, why, who and which? The question words at the back of the lessons were a challenge to me in my class. I designed an entire sequence of dialogues and made them do a role play in class by using masks. Before making them do a role-play I asked them a lot of questions beginning with how? Why? Where? What? When? Which? This was an interesting activity as children whole-heartedly participated in it.



Once this was done, the class was divided into groups and one section asked a question and the opposite section answered it.

**Objective :**

Use of masks to develop questioning skills in children.

**Materials used :** Masks of animals and popular characters.

**Procedure :**

- I got masks of animals and other favorite characters like Chota Bheem and Mickey Mouse from the shop.
- I taught the children a few dialogues about food habits and the place where these animals or characters live by using the above mentioned words to formulate questions.
- The children enacted the dialogues in pairs before the class and talked for 3 to 4 minutes continuously in English.
- Slowly there was a rush as to who will come forward to speak in front of the class.
- The students began making their own masks for role-plays.

**Benefits :**

- Questioning skills improved.
- Dialogues created a real-life situation and children became more motivated to talk.
- Children gained more knowledge about animals and their favourite characters through a questioning and answering activity.
- Children's creativity got developed.

**Conclusion**

Communicative language proficiency plays a crucial role in getting along in life by using various language functions and also for developing confidence in children. Since English is an alien language and children who study it in our government schools do not have sufficient exposure to it, it is our duty as teachers to create a language rich environment in our classrooms. In this context, the use of authentic materials is certainly an effective teaching-aid for meaningful learning to take place amongst our students.



# கைவினை பொருட்கள் வழி கற்றல் கற்பித்தல்

ம. சாந்தகுமாரி
அரசு தொடக்கப்பள்ளி, முருங்கப்பாக்கம்

**அறிமுகம்**

ஆயகலைகள் 64 என்பர். கலையோடு இணைந்து கற்கும் பொழுது நம் கல்வியறிவு மேன்மேலும் மெருகூட்டப்படுவது உண்மை. இயற்கையாகவே குழந்தைகளுக்கு சுறுசுறுப்பும், துடிப்பும், கற்கும் ஆர்வமும் அதிகமாக இருக்கும். எதையாவது தன் கைகளால் செய்யும் பொழுது மிக்க மகிழ்ச்சி அடைகின்றனர். உதாரணமாக, வரைதல், வண்ணம் தீட்டுதல், பொம்மைகளை வைத்து விளையாடுதல், பிரித்தல், சேர்த்தல், அடுக்குதல் போன்ற செயல்களில் அனைத்து குழந்தைகளும் ஆர்வத்துடன் பங்கெடுக்கின்றனர். குழந்தைகளுக்கு இச்செயல்கள் தெரியுமோ, தெரியாதோ. ஆனால், தான் ஏதோ பெரிய சாதனையைச் செய்வது போன்ற மிக்க ஆர்வத்துடன், மகிழ்ச்சியுடன் செயல் படுவதை நாம் கண்கூடாக உணர்கிறோம். படிப்பில் ஆர்வம் இல்லாத குழந்தைகள் கூட இதுபோன்ற பயிற்சிகளில் மிக்க மகிழ்ச்சியுடன் செயல்படுகின்றனர்.

ஒவ்வொருவருக்குள்ளும் கலையாற்றல் மண்டிக் கிடக்கிறது. அதைநன்கு உணர்ந்து நம் திறமையை வளர்த்துக் கொள்ளும்பொழுது நம்முள்ளே இருக்கும் ஆற்றல் ஊற்றென பொங்கி வெளிவந்து நம்மை இவ்வுலகிற்கு சாதனையாளராக, வியப்பிற்குரிய மனிதனாக பறைசாற்றுகின்றது.

**பாரம்பரியமான கைத்தொழில்கள்**

கைத்தொழில் கலை என்பது ஒரு தொடர் நடவடிக்கை. அற்புதமான உள்ளூர் தொழில் நுட்பம். இது பழையது என புறக்கணிக்கப்படுவதில்லை. இதற்குத் தேவையான மூலப் பொருட்கள் உள்ளூரிலேயே கிடைப்பதுடன், சுற்றுச் சூழலுக்கும் கேடு விளைவிக்காதவை. இன்றைய அற்புதமான தொழில்நுட்பமும், வடிவமைப்புகளும், ஊசிக்க பொருட்களும் கைத்தொழிற் கலையில் பயன் படுகிறது. இவற்றை நாம் பாடத்திட்டத்தில் அருமையாகப் பயன்படுத்த முடியும். நேரடியாக கைகளாலேயே கிடைக்கும் பொருட்களையும், தொழில் நுட்பத்தையும் பயன்படுத்துவதன் மூலம் பல்வேறு நடைமுறைகளைப் புரிந்துகொள்வதுடன், புதியவற்றை கற்றுக்கொண்டு திறமைசாலிகளாக மிளிர முடியும். இவை எக்காலத்திற்கும் குழந்தைகளுக்கு உதவிடும் அற்புதமான கலைகளாகும். கலைக்கல்வி மூலம் ஒரு பயனுள்ள கல்வியை வழங்க முடிகிறது.

"கைத்தொழில் கல்வி, படைப்புத்திறனை போதிப்பதாக இருப்பதுடன், முழுமையானதாகவும் அதே நேரத்தில் ஒரு வேலைத் திறனாகவும் போதிக்கப்படவேண்டும். மேலும் மற்ற பாடங்களைப் போதிப்பதிலும் இந்த கைத்தொழில் பற்றி சேர்த்து போதிக்கலாம். அதேபோல் கைத்தொழில் பாடம் படிக்கும்போது சுற்றுச்சூழல், சமூகம், பாலினம், சமத்துவம் பற்றியும் சேர்த்துப் படிக்க வேண்டும்". (பக். 56, NCF 2005)

மேற்கூறப்பட்ட கலைத்திட்ட வடிவமைப்பின்படி கைவினைப் பொருட்கள் செய்யும் பயிற்சியை மாணவர்களுக்கு சிறுவயது முதலே கொடுக்கும்பொழுது அவர்கள் தனக்கு ஏதோ தெரியும், தன்னாலும் ஒரு அழகிய பொருளை உருவாக்க முடியும் என்ற தன்னம்பிக்கையுடன் முன்னேற ஒருவாய்ப்பாக அமையும். 'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' என்பது போல குழந்தைகளுக்கு பயனுள்ள வாழ்க்கைக்கல்வியை போதிப்பதும் நமது கடமையாக இருக்கிறது. மாணவர்களின் படைப்பாற்றல் திறனை வெளிக்கொணர்ந்து முன்னேற, ஆசிரியர்களாகிய நாம் துணையாய் இருந்து வழிகாட்டுவதே நமது தலையாய கடமையாகின்றது. மெதுவாகக் கற்கும் மாணவர்கள் கூட கலைப்பொருட்கள் செய்வதிலும், கைவினைப் பொருட்கள் செய்வதிலும் மிக்க ஆர்வத்துடன் ஈடுபடுவர் என்பது கண்கூடாக கண்ட உண்மையாகும்.

ஏகலைவன் குருவை மனத்திற்குள் தியானித்து வணங்கியே தன் வில்லாற்றல் திறனை கற்றுத்தேர்ந்து மிகச்சிறந்த வில்லாளியாகி பாரில் புகழ் பெற்றான். எல்லையில்லா ஆற்றலைப் பெற்றான். அதைப் போலவே நம் ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு திறமை இருக்கிறது. அதை வெளிக் கொணரும் வண்ணம் நம் 'தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை' பாடத்திட்டம் அமைந்தது. நமக்கு அது நல்ல வாய்ப்பைத் தேடித் தருவதாக இருக்கிறது. மேலும் தொடர் மதிப்பீட்டு முறையில் ஒவ்வொரு பாடத்திற்கும் இப்படிப்பட்ட திறனை வளர்க்கும் வண்ணம் மதிப்பீட்டு முறை அமைந்துள்ளது. நம் திறமை என்ன? நம்மால் எதைச் சிறப்பாக செய்ய முடியும்

என்பதை அறிந்து நம் திறமையை, ஆற்றலை வளர்த்துக் கொள்ள நமக்குமிகவும் உதவியாக உள்ளது. சிறு வயதிலேயே அதைக் கண்டுபிடித்து நாம் நம் திறமையை வளர்த்துக் கொள்ளும் பொழுது அது உலகம் முழுவதும் பேசப்பட வைக்கும் மாபெரும் சக்தியாய் நம்மில் உருகொள்வது உண்மை.

**வகுப்பறை அனுபவம்**

நான்காம் வகுப்பு, இரண்டாம் பருவம், தமிழ்ப்பாடத்தில் பாடம் – 2, "இனிமையான எதிர்காலம்" என்ற தலைப்பில் நெகிழிப் (Flastic) பொருள்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் மற்றும் நெகிழிப் பொருட்களால் சுற்றுப்புற சீர்கேடு, தீயவிளைவுகள் ஏற்படுவது விளக்கப் பட்டுள்ளது. மேலும் நெகிழிப் பொருட்களால் நன்மையா? தீமையா ? சுற்றுப்புறச் சீர்கேட்டைத் தடுக்க நாம் செய்ய வேண்டியது என்ன? போன்றவைபற்றி கருத்தாடல் போல் பாடம் வடிவமைக்கப்பட்டுள்ளது.


நெகிழிப் பொருட்களால் தீமைகள் தான் அதிகம் என்றாலும் அதைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க இயலாது. ஆனால் நாம் குறைத்துக்கொள்ளலாம் என்பது உணர்த்தப்பட்டுள்ளது. மேலும் குப்பையில்லாமல் நம் பள்ளி மற்றும் சுற்றுப்புறத்தை எப்படி வைத்துக் கொள்வது? வீணாகும் பொருள்களை வேறு எந்த முறைகளில் பயன்படுத்த முடியும் ? என்பன போன்ற கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. இதைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு நாம் எந்தவகை செயல்பாடுகளைத்தரப் போகின்றோம் என்பதைச் சிந்தித்தபொழுது எனக்கு கிடைத்த வாய்ப்பை நல்முறையில் பயன்படுத்தி செயலாக்கத்தை உருவாக்கினேன்.

பள்ளியில் அனைத்து வகுப்புகளிலும், சுற்றுப் புறத்திலும் கிடைத்த தாள்களை இரண்டு நாட்கள் நீரில் ஊற வைத்து அரைத்து கூழாக்கி, கூடை, கிண்ணம் போன்ற பல பொருட்கள் செய்ய குழுக்களாகப் பிரிந்து செயலில் ஈடுபட்டு பல பொருட்கள் செய்ய வைத்தோம்.

**வீணான காகிதங்களைப் பயன்படுத்தி**
**செயல் : 1**




இதுபோன்ற தேவையற்ற காலண்டர் தாள்களைப் பிரிக்காமல் மொத்தமாக அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டும்.



முதல் தாளை முக்கோணமாக படத்தில் காட்டியுள்ளபடி மடிக்க வேண்டும்.


அதற்கு அடுத்ததாளையும் அவ்வாறே மடித்துக் கொள்ள வேண்டும்.இதைப்போலவே தொடர்ந்து மடித்துக் கொண்டே வரவேண்டும். மடிக்கும் பொழுது விளிம்புகளைத் தடவி நன்கு மடிக்க வேண்டும்.



தொடர்ந்து மடித்துக் கொண்டு வர இதனைப் போன்ற தோற்றம் கிடைக்கும்.



முழுவதையும் மடிக்க இதைப்போன்ற மிக அழகிய வீடு போன்ற தோற்றம் கிடைக்கும். இதைப்போலவே மற்றொரு வீடு செய்து இரண்டையும் ஒட்டவும் செய்ய மேலும் அழகு பெறும். மேலே பூக்கள் வைத்துப் பூச்சாடியாகப் பயன்படுத்தலாம். இதுபோன்ற படித்து முடித்த தேவையற்ற புத்தகங்களையும் கிழிக்காமல் இதைப்போலவே மடிக்க மிகப்பெரிய வீடு கிடைக்கும். சுற்றி வண்ணந்தீட்ட இன்னும் கண்ணைக் கவரும் வண்ண பூச்சாடி கிடைக்கும்.




புத்தகத்தின் முதல் தாளை முக்கோண வடிவில் மடிக்க வேண்டும் அடுத்தாளில் கீழ்ப்பக்கமாக மடித்து மீண்டும் முக்கோணமாக்க வேண்டும். அதற்கு அடுத்ததாளை நீளவாக்கில் சரிபாதியாக மடிக்க வேண்டும்.



அடுத்ததாளை முக்கோணமாக மடிக்க வேண்டும். இப்படியே படத்தில் காட்டியுள்ளது போல் தொடர்ந்து மடிக்க வேண்டும்.



புத்தகம் முழுவதையும் இவ்வாறே மடித்து முடிக்க வேண்டும். இதைப்போன்ற அழகிய பூச்சாடி கிடைக்கும்.



இரண்டுபுத்தகங்களை இதுபோல் செய்த ஒன்றுடன் ஒன்று ஒட்டவிடவும் அழகிய பூச்சாடி கிடைக்கும்.

பை மெல்லிய பையாக இருந்தால் போதும் என்று நினைத்தால் ஒரு செய்தித்தாளை எடுத்து தேவையான அளவு வெட்டி வைத்துக்கொள்ள வேண்டும். பின்னர் அதை மடித்து ஒட்டி பை செய்ய வேண்டும். பருப்பு, சர்க்கரை, அரிசி போன்ற மளிகைப் பொருட்கள் வாங்க வேண்டும் என்றால் கொஞ்சம் மொத்தமான பை தேவை. இதற்கு இரண்டு அல்லது மூன்று செய்தித் தாள்களை ஒட்டி வாபமைத்து பை செய்யும் பொழுது காய்கறி, பழம் போன்ற பொருட்கள் வாங்க பயன் படுத்தலாம். இதன் மூலம் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு குறையும்.

பழைய முடிந்த செய்தித்தாள்கள், பத்திரிக்கைகள், அறிக்கைகள் இவற்றைப் பயன்படுத்தி காகிதப் பைகள் (Covers) போன்றவற்றை எப்படிச் செய்வது என விளக்கப்பட்டது. மாணவர்கள் குழுக்களாக அமர்ந்த பல பைகள் தயாரித்தனர்.




முடிந்து விட்ட திருமணப் பத்திரிக்கைகள் கொண்டு வரச்செய்து, அதனை உட்பக்கமாகப் பிரித்தால் அதிலிருந்து நல்ல தாள் பிரிந்துவரும் அதனைப் பயன்படுத்தி அன்பளிப்பு கவர் செய்ய கற்றுத்தரப்பட்டது. மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கெடுத்தனர்.



பழைய முடிந்த செய்தித்தாள் மற்றும் வாரமலர் போன்ற புத்தகத்தாள்களைப் பயன்படுத்தி அழகியகூடைகள், எழுதுகோல் தாங்கி, அழகிய பெட்டிகள் போன்றவை செய்ய கற்றுத்தரப்பட்டது.

ஒவ்வொருநாளாக கருட்டி, மடித்து ஒட்டி பூக்கூடை, தட்டு, கிண்ணம், எழுதுகோல் தாங்கிபோன்ற பலபொருட்களை மாணவர்கள் குழுக்களில் செய்து மகிழ்ந்தனர்.





வீணாகின்ற குடிநீர் பாட்டில்களை மறு சுழற்சியாக பயன்படுத்தும் பலமுறைகள் எடுத்துச்சொல்லப்பட்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

(உ.ம்)

1. தண்ணீர் பாட்டிலை பக்கவாட்டில் அறுத்து மண் நிரப்பி மணி பிளாண்ட் போன்ற சிறு செடிகள் வளர்க்கலாம்.
2. பறவைகள் உண்ணும் தானிய பெட்டி தயாரித்தல்.
3. அழகிய வண்டு செய்தல்.
4. குண்டூசி போட்டு வைக்கும் பெட்டி தயாரித்தல்.
5. பஞ்சடைத்து கரும்பலகை துடைக்கப் பயன்படுத்துதல்.
6. பொம்மைகள் செய்தல். (காலி பாட்டிலைச் சுற்றி ஸ்பாஞ்ச் பயன்படுத்தி பாவாடை கட்டி பொம்மை செய்தல்)
7. Container ஆக பயன்படுத்தலாம்.
8. செடிகளுக்கு நீர் ஊற்றும் கருவி தயாரித்தல். (பாட்டிலின் மேல் மூடி / அடியில் சிறு சிறு துளைகள் இட்டு நீரூட்ட பயன்படுத்தலாம்).
9. பூச்சாடி செய்தல்.
10. அறிவியல் சோதனைகள் செய்தல்.
11. கைதுவைத்தி Stand செய்தல்.

போன்ற பல யுக்திகள் கையாளப்பட்டது. மாணவர்கள் ஆர்வத்துடன் அதிக ஈடுபாட்டுடன் செயல்பட்டனர்.

மாணவர்கள் மிக்க ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் கற்றலில் ஈடுபட்டது கண்கூடாக கண்ட உண்மை. இதைப் பயன்படுத்தி மாணவர்கள் அவர்களின் கற்பனைத் திறனுக்கேற்ப பலபொருட்கள் செய்துவந்தனர்.

(உ.ம்)

கல்யாணப் பத்திரிக்கைகள் கொண்டு கைப்பை, அலங்காரத் தட்டுகள், வீணான ரிப்பன் கொண்டு மிதியடி போன்ற பலபொருட்கள் செய்து வந்தது என்னை வியப்பில் ஆழ்த்தியது. அத்தகைய செயல்பாடுகளையும் மதிப்பீடு செய்தேன்.

பகுதி - I
FA(a)

| வ.எ | பொருள் | மதிப்பெண் |
|---|---|---|
| 1. | மூலப் பொருட்களின் தன்மை | |
| 2. | கற்பனைத்திறன் | |
| 3. | பொருட்களின் பயன்பாடு | |
| 4. | நேர்த்தி / அழகியல் பார்வை | |
| 5. | பூர்த்தி செய்தல் / கால அளவு | |
| | மொத்தம் | |

இது மட்டும்அன்றி கல்வி இணைச் செயல் பாடுகளையும் உற்று நோக்கி இதன் மூலம் எளிதில் மதிப்பிட முடிந்தது.

பகுதி - 2
வாழ்க்கைத் திறன்

| தொடர்பாற்றல் | தோட்டத்தில் தன்னை நிலைநாட்டல் | கற்கிறவனும் திறனைப் பெற்றுப் படுத்துதல் | பிற சூழ்நிலை-களை ஏற்பது | மொத்தம் | Grade |
|---|---|---|---|---|---|

மனப்பான்மைகளும் மதிப்புகளும்
பாராட்டத்தக்க பண்புகளை

1. நண்பர்களுக்கு உதவி செய்தல்
2. சொல்லிலும் செயலிலும் அனைவருக்கும் மதிப்பளித்தல்
3. பொருட்களைப் பாதுகாப்பாகக் கையாளுதல்
4. அடுத்தவருக்கு முன்வந்து உதவுதல் / விட்டுக்கொடுத்தல்

**சுற்றுச்சூழல் மதிப்புகள்**

1. நெகிழிப் பொருட்களின் பயன்பாட்டைக் குறைத்தல், மறு பயன்பாடு மற்றும் மறு சுழற்சிபற்றி அறிதல்.

2. சுற்றுப்புற மாசினால் விளையும் தீமைகளை அறிதல்

3. சுற்றுப்புறத்தைப் பாதுகாக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் முழுமையாகப் பங்கேற்றல்.

4. சுற்றுப்புறச்சூழல் சார்ந்த செய்திகளைப் பரப்பத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

போன்ற கல்வி இணைச் செயல்பாடுகளையும் எளிதாக மதிப்பிட முடிகிறது. கொடுக்கப்பட்ட ஒரு செயல் பாட்டின்மூலம் இத்தனையும் மதிப்பீட்டப்படுவதால் நமது வேலைப்பளு வெகுவாகக் குறைகின்றது.

இதன் தொடர்ச்சியாக மூன்றாம் பருவத்தில் புகழேந்தி வாத்தியார் பாடம் அமைகிறது. மாணவர்கள் செய்துவந்த பொருட்களை கண்காட்சியில் வைத்து பரிசுகள் வழங்கப் பட்டது. மாணவர்கள் மிகவும் மகிழ்ச்சியிடைந்தனர். மாணவர்கள் மட்டுமல்லாது நானும் அதிக பூரிப்படைந்தது உண்மை.





இதன் தொடர்ச்சியாக மாணவர்கள் பல செயல்களில் ஈடுபடுவதைப் பார்க்க முடிகின்றது. வீணாகிவிட்டது என்று தூக்கிப்போடும் பொருளைவைத்து ஏதாவது செய்ய முடியுமா ? என்று யோசித்து பலபொருட்கள் செய்கின்றனர். அவர்களின் கற்பனைத் திறன் வளர நல்லதொரு வாய்ப்பாக இருக்கின்றது. வீணாகிய CD கொண்டு மீன், பறவை போன்ற பலஉருவங்கள் செய்கின்றனர். பல செடிகள் வளர்க்க பிளாஸ்டிக் பாட்டில்கள் பயன் படுத்தகின்றனர். மறுசுழற்சியாக காகிதப் பைகள் நிறைய செய்து பயன்படுத்துகின்றனர். இதையெல்லாம் பார்க்கும்பொழுது மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டதுடன் அனைவரின் பாராட்டுதலும் கிடைக்கப்பெற்றது. குழந்தைகளுக்குச் சென்றடைய வேண்டிய திறன் முழுமையாகச் சென்றடைந்தது கண்டு வியப்புடன் மனதிருப்தி கிடைக்கப்பெற்றது உண்மை.





# நானே செய்வேன் ! நானே கற்பேன் !!

ச. குணசெல்வி
அரசு தொடக்கப்பள்ளி, செம்பியப்பாளையம்

தொடக்க நிலை ஆசிரியையான நான், எனது 7 வருட ஆசிரியப் பணியில் பலவிதமான திறன்களையும் மாறுபட்ட பல ஆர்வங்களையும் கொண்ட விதவிதமான மாணவர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அவர்கள் அனைவருமே வகுப்பறையில் அமர்ந்து கற்பதைவிட விளையாடுவதையே பெரிதும் விரும்புகின்றனர். மேலும் அவர்கள் கையில் பொருட்களை வைத்துக் கொண்டு அவற்றோடு விளையாடும்போது, அவ்விளையாட்டில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கின்றனர். இந்த உற்றுநோக்கல் எனக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. மாணவர்கள் கற்றலில் முழுமையாக ஈடுபடவேண்டுமெனில் கற்பித்தல் விளையாட்டு முறையில் இருக்க வேண்டும். மேலும் கற்றல் – கற்பித்தல் கருவிகளும் அவர்களைக் கவரும் வகையில் அமைய வேண்டும் என்று முடிவெடுத்தேன்.

அன்று முதல் வண்ண வண்ண துணைக் கருவிகளோடு வகுப்பறைக்குள் நுழைந்தேன். மாணவர்களும் மிகுந்த ஆர்வத்தோடு அவற்றைக் கொண்டு கற்க ஆரம்பித்தனர். அவற்றையெல்லாம் தொட்டுப் தொட்டுப் பார்த்தனர். ஆனந்தமாய் ஆடிப்பாடினர். இவையனைத்தும் சிறிது காலமே நிகழ்ந்தன.

இத்துணைக்கருவிகள் அவர்களுக்குப் பழகிப் போனதால், அவர்களின் ஆர்வமும் நாளுக்கு நாள் குறையத் தொடங்கியது. துணைக்கருவிகளை நானே எனது வீட்டில் செய்து கொண்டு வருவதால் மாணவர்களுக்கு அவற்றின் மீது பிணைப்பு ஏற்படவில்லை. எனவே, அவற்றை நான் மாணவர்களின் உதவியோடு வகுப்பறையிலேயே தயாரிக்கத் தொடங்கினேன். பிறகு அவைகள் அனைத்தும் அவர்களின் உடைமைகளாயின. அவற்றைப் பாதுகாக்கத் தொடங்கினர். துணைக் கருவிகளைப் பயன்படுத்தியபின் அவற்றிற்குரிய இடங்களில் வைக்கத் தொடங்கினர். இச்செயல்கள் எனக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்தியதோடு, நான் எதையோ செய்யத் தொடங்கியுள்ளேன் என்ற நம்பிக்கையையும் கொடுத்தது.

மாணவர்களின் கற்றலுக்குத் துணைக்கருவிகளைப் பயன்படுத்துவதால் எனது வகுப்பறை தனித்துவம் பெற்றதாக எண்ணுகிறேன். மாணவர்கள் சுமையின்றி, மகிழ்ச்சியாகக் கற்கின்றனர். அவர்களுக்குக் கற்றலில் சலிப்பு ஏற்படவில்லை. ஓய்வு நேரங்களையும் கற்றல் செயல்பாடுகளில் செலவிடுகின்றனர். அதிக நேரம் அவர்களின் கவனத்தை ஒரு செயலில் செலுத்த முடிகிறது. வீட்டுப்பாடங்களை மகிழ்ச்சியுடன் ஏற்கின்றனர். பள்ளியில் நடப்பதைப் பெற்றோரும் அறிகின்றனர். தத்தம் குழந்தைகளின் கற்றலுக்குத் தங்களால் ஆன உதவிகளையும் செய்கின்றனர். வேறுபாடுகளைக் களைந்து அனைத்து மாணவர்களும் ஒன்றாக இணைந்து துணைக்கருவிகளைத் தயாரிக்கின்றனர். தேவையற்ற பொருட்கள், கலைப்பொருட்களாக மாறுகின்றன. இச்செயல்பாடு குழுக்கற்றலை வலுப்படுத்துவதோடு கற்றலுக்கான சிறந்த ஒரு சூழலையும் ஏற்படுத்துகிறது.

எங்கள் வகுப்பறைச் செயல்பாடுகள் சிலவற்றைத் தங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டுமெனின்,

1. மாணவர்கள் தங்கள் சுற்றுப்புறத்தை நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக – சுற்றுப்புறத்தில் கிடைக்கக் கூடிய பொருட்களைச் சேகரித்துப் பாதுகாத்தல்.

2. அவர்களின் நுண்தசை இயக்கத்தை மேம்படுத்த களிமண், துணி, காகிதம் போன்றவற்றைக் கொண்டு பொம்மைகளைச் செய்தல்.

3. கற்றலின் புரிதலை மதிப்பிட – நாடகங்கள், தானே நடித்தல் போன்ற செயல்களில் ஈடுபடுதல்.

4. பறவைகளின் வாழிடங்களையும் அவற்றின் சிறப்புத் தன்மைகளையும் அறிந்து கொள்ள இறகுகளைச் சேகரித்து, பறவைகளின் உருவங்களைச் செய்தல்.

5. சொற்களஞ்சியத்தைப் பெருக்க – 'ஒரு பார்வை சொற்களைச்' சுவரில் ஒட்டி வைத்தல், எழுத்து அட்டைகளைக் கொடுத்து வார்த்தைகளை உருவாக்குதல் மற்றும் வார்த்தைகளைக் கொண்டு

வாக்கியங்களை உருவாக்குதல்.

6. வாசிப்பதற்கான வாய்ப்பை அதிகரிக்க – வகுப்பறைச் சுவரில் அறிவிப்புகள், விளம்பரத்தாள்கள் போன்றவற்றை ஒட்டி வைத்தல்.

7. மாணவர்களின் கற்பனைத் திறன் மற்றும் ஆக்க திறனை வளர்க்க – காய்கறிகள் மற்றும் விரல்களைக் கொண்டு அச்சு ஓவியங்களை வரைதல் மற்றும் கதைப் புத்தகங்களைத்தயாரித்தல்.



இவ்வாறு நாங்கள் வகுப்பறையில் செய்த செயல்பாடுகள் சிலவற்றின் விளக்கங்களையும் எழுத விழைகிறேன்.

**செயல்பாடு - I - வார்த்தைப்பூச்சட்டி**
**நோக்கம் :** சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல்

**தேவையான பொருட்கள் :** அட்டைப்பெட்டி, வெள்ளைத் தாள், மணல், பசை, குச்சிகள்

**செயல் விளக்கம் :**

மாணவர்களை வட்டமாக அமர வைத்து, அவர்களிடம் ஒரு பூச்சட்டியைக் காட்ட வேண்டும். அதை மாதிரியாகக் கொண்டு 'வார்த்தைப் பூச்சட்டியை' எவ்வாறு செய்ய வேண்டும் என்று விளக்கமாகக் கூற வேண்டும். எனது வகுப்பில் 8 குழந்தைகளே உள்ளதால், நான் அவர்களை 2 குழுக்களாகப் பிரித்தேன். ஒரு வார்த்தைப் பூச்சட்டி செய்ய என்னென்ன பொருட்கள் தேவை என்பதைத் தமது நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொள்ளச் சொல்ல வேண்டும். தேவையான பொருட்களை ஒவ்வொரு குழுவும் சேகரித்து வந்து தத்தம் குழுவில் வட்டமாக அமர வேண்டும்.

இப்போது ஆசிரியர் 'செயல் முறை விளக்கத் தாளை' ஒவ்வொரு மாணவருக்கும் வழங்குவார். ஒவ்வொருவரும் அதைப் படித்து, பின் தமது குழுவில் கலந்தாலோசித்து, தத்தம் வேலையைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். (உ.ம். தாள்களை வெட்டுதல், வார்த்தைகளை எழுதுதல், வார்த்தைகளைக் குச்சிகளில் ஒட்டுதல் போன்றவை)

பின் அவர்கள் எந்த கருத்தை மையமாக வைத்து வார்த்தைகளை உருவாக்க வேண்டும் என்று குழுவாக முடிவெடுக்க வேண்டும். (உ.ம். விலங்குகள், பறவைகள், உடைகள், எழுது பொருட்கள் போன்றவை) கருவை மையமாகக் கொண்ட வார்த்தைகளை நோட்டுப் புத்தகத்தில் எழுத வேண்டும் (உ.ம். விலங்குகள் – யானை, புலி, குதிரை, மான், பூனை முதலானவை). மாணவர்கள் அவரவர் வேலைகளைச் செய்து, குழுவுக்கு ஒன்றாக இரண்டு 'வார்த்தைப் பூச்சட்டிகளைத்' தயாரிப்பர். ஆசிரியர் செயல்பாட்டை மேற்பார்வையிட்டு தேவைப்படும் இடங்களில் உதவி புரிவார்.

**பயன்பாடு :**

1. மாணவர்கள் ஒவ்வொருவரும் இதில் உள்ள ஒரு வார்த்தையை எடுத்து, அவ்வார்த்தையைக் கொண்டு ஒரு வாக்கியம் கூறுதல்.
2. ஒரு குழு தாம் எவ்வாறு இவ்வார்த்தைப் பூச்சட்டியை உருவாக்கினார்கள் என்ற செயல் விளக்கத்தை மற்ற குழுவுக்குக் கூறுதல்.
3. ஒரு குழு தரும் கருவை மையமாகக் கொண்ட வார்த்தைகளை மற்ற குழு மாணவர்கள் கூறுதல்.

இவை போன்ற பல்வேறு மொழி விளையாட்டுகளுக்கு இத்துணைக் கருவியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



**மாணவர்களுக்கான செயல்முறை விளக்கத் தாள் :**

- உங்கள் குழுவில் வட்டமாக அமர வேண்டும்.
- உங்கள் குழுவிற்கான கருவைத் / தலைப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும். (உ.ம்.) பூக்கள்
- தலைப்பிற்கேற்ற 20 வார்த்தைகளை உங்கள் நோட்டுப் புத்தகத்தில் எழுத வேண்டும். (உ.ம்) சாமந்தி, முல்லை
- ஒரு வெள்ளைத்தாளை எடுத்து 20 சம துண்டுகளாக கிழிக்க வேண்டும்.

- ஒவ்வொரு துண்டு காகிதத்திலும் ஒரு வார்த்தையை எழுத வேண்டும்.
- ஒவ்வொரு காகிதத் துண்டின் பின்புறத்திலும் ஒரு குச்சியை ஒட்ட வேண்டும்.
- ஒரு அட்டைப் பெட்டியை எடுத்து, அதன் மேல் பக்கத்தை வெட்டி எடுத்து விட வேண்டும்.
- பெட்டியின் மேற்புறத்தில் ஒரு வண்ணத் தாளை ஒட்டி, அதன் மேல் பூச்சட்டியின் தலைப்பை எழுத வேண்டும்.
- அட்டைப் பெட்டியின் 3 / 4 பாகத்தை மணலால் நிரப்ப வேண்டும்.
- வார்த்தைக் குச்சிகளை மணலில் செருக வேண்டும்.
- இப்போது உங்கள் 'வார்த்தைப் பூச்சட்டி' தயார்.

**கற்றல் வெளிப்பாடு :**

இச்செயல்பாட்டின் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட குறிப்புகளை அவர்களால் படித்து, புரிந்து கொண்டு, அவற்றைச் செயல்படுத்த முடிகிறது. ஒரு குறிப்பிட்ட தலைப்பின் கீழ் வரத்தக்க வார்த்தைகள் பலவற்றைப் பட்டியலிட முடிகிறது. குழுச் செயல்பாட்டில் பங்கேற்க முடிகிறது. செய்து முடித்த ஒரு செயலை மற்றவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைக்க முடிகிறது.

**செயல்பாடு - 2**
**விரல் பொம்மைகள் மூலம் தானே நடித்தல்**

**நோக்கம் :** தானே நடித்தல் மூலம் கற்றலின் புரிதலை மதிப்பிடுதல்

**தேவையான பொருட்கள் :** சார்ட் தாள்கள், வண்ணங்கள், பென்சில், கத்தரி, பசை

**செயல் முறை :**

இச்செயல்பாடு, 'விட்டுக்கொடு விருப்பதோடு' என்ற 3 ஆம் வகுப்பு பாடத்தை நடத்தி முடித்தபின் செய்யப் படுவதாகும். ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு துண்டு அட்டைத்தாளைக் கொடுத்து அதில் அவரவருக்கு விருப்பமான (பாடத்தில் உள்ள) விலங்குகளின் உருவத்தை வரையச் சொல்ல வேண்டும். (உ.ம்) சிறுத்தை, எருது, கழுகு. ஒவ்வொரு மாணவரும் வெவ்வேறு உருவத்தை வரையுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். பிறகு அந்த உருவத்தை அப்படியே வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். படம் வரையத் தடுமாறும் மாணவர்கள் படங்களை பழைய புத்தகங்கள் / செய்தித் தாள்களில் இருந்த வெட்டி எடுத்துக்கொள்ளலாம்.

பின் வேறொரு துண்டுத் தாளை எடுத்து தங்கள் விரல் நுழையும் அளவில் சுற்றி முனையை ஒட்டிவிட வேண்டும். அச்சுருளின் மீது வெட்டப்பட்ட உருவத்தை ஒட்டிவிட வேண்டும். இப்போது யார் யார் எந்த விலங்கின் உருவ பொம்மையைச் செய்தனரோ, அந்தந்த கதாப்பாத்திரங்களை ஏற்று, அந்த விரல் பொம்மையைக் கொண்டு வகுப்பறையில் நடித்துக் காட்டவேண்டும்.

**கற்றல் வெளிப்பாடு :**

இதன் மூலம் மாணவர்கள் தங்களின் புரிதலை வெளிப்படுத்துவர். கதாப்பாத்திரங்களின் உரையாடலை தமது மொழியில் உருவாக்குவார்கள். அவர்களின் உரையாடலில் கற்பனை கலந்திருக்கும். தங்களின் புரிதலில் உள்ள குறைகளைச் சக மாணவர்களின் உதவியோடு சரி செய்து கொள்வர்.

**செயல்பாடு - 3 களிமண் பொம்மைகள் செய்தல்**
**நோக்கம் :**

- மாணவர்கள் தானே சிந்தித்து, எழுதி மற்றவரோடு பகிர்ந்து கொள்ளுதல்
- ஒரு செயலில் தன் கவனத்தை நிலை நிறுத்த பயிற்சி மேற்கொள்ளுதல்.

**தேவையான பொருட்கள் :** களிமண், தாள் மற்றும் எழுதுகோள்

**செயல்முறை :**

மாணவர்களை அவர்கள் வீட்டின் அருகாமையிலிருந்து களிமண்ணைக் கொண்டு வரச் சொல்ல வேண்டும். வகுப்பில் இருவர் இருவராக அமர்ந்து, அவர்களுக்குத் தெரிந்த சமையல் பாத்திரங்களைச் செய்யச் சொல்ல வேண்டும். செய்து முடித்தபின் அவற்றை உலர வைக்க வேண்டும். ஆசிரியர் 4 துண்டுத்தாள்களை எடுத்து ஒவ்வொன்றிலும் செயல்முறை, பயன்கள், களிமண்ணின் தன்மை, உங்கள் அனுபவம் என்று சீட்டிற்கு ஒன்றாக எழுத வேண்டும். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு சீட்டைக் கொடுக்கவேண்டும்.

ஒவ்வொரு குழுவும் தனக்குக் கிடைத்த தலைப்பின் கீழ் 4 கருத்துக்களை எழுதி மற்றவர் முன் வாசித்துக் காட்ட வேண்டும்.



**கற்றல் வெளிப்பாடு :**

மாணவர்களால் வீடுகளில் பயன்படுத்தப்படும் சமையல் பாத்திரங்களையும் அவற்றின் பயன் பாடுகளையும் மீட்டுணர முடியும். களிமண் கொண்டு பாத்திரங்களை உருவாக்கும் போது அவர்களின் நுண்தசை இயக்கம் மேம்படும். ஒரு குறிப்பிட்ட தலைப்பின் கீழ் கவனத்தைச் செலுத்தி கருத்துக்களை வெளிப்படுத்த முடியும்.


**செயல்பாடு - 4 எழுதுத்தோட்டம்**

**நோக்கம் :** தமிழ்மொழியில் குறில் – நெடில் வேறுபாடு அறிதல்

**தேவையான பொருட்கள் :** களிமண், தாள், எழுதுகோல், மின்னலட்டைகள் மற்றும் பொருத்தட்டை

**செயல்முறை :**

ஒவ்வொரு மின்னலட்டையிலும் ஓர் எழுத்துவீதம் 246 எழுத்துக்களையும் எழுதி, எழுத்து அட்டைகளைத் தயாரிக்க வேண்டும். ஆசிரியர் ஒவ்வொரு மாணவனாக அழைத்து ஈரெழுத்து அல்லது மூவெழுத்துச் சொல் ஒன்றைக் கூறச் சொல்ல வேண்டும். மாணவன் அந்த சொல்லுக்கான எழுத்துக்களைத் தேர்ந்தெடுத்து, பொருத் தட்டையில் எழுத்துக்களைப் பொருத்தி வார்த்தையை உருவாக்க வேண்டும். மற்ற மாணவர்கள் அதை வாசிக்க வேண்டும்.



**கற்றல் வெளிப்பாடு :**

இச்செயல்பாட்டின் மூலம், மாணவர்களிடம் இருக்கும் குறில் – நெடில் தொடர்பான குறைபாடுகள் கண்டறியப்படுகிறது. ஆசிரியர் மாணவர்களுக்குத் தக்க இடத்தில் உதவி செய்து கற்றலை மேம்படுத்தலாம். மேலும் சக மாணவர்களிடமிருந்து கற்றலுக்கான சிறந்த செயல்பாடு இது.

**கற்றலின் மீது துணைக்கருவிகள் ஏற்படுத்தும் தாக்கம் :**

துணைக்கருவிகள் கொண்டு கற்கும்போது மாணவர்கள் அனைவரும் கற்றலில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கின்றனர். அவர்களின் பெற்றோர்களும் இச்செயலில் இணைவதால், வீட்டுப்பாடம் எளிமையாகிறது. மாணவர்களின் கற்பனைத் திறனும் ஆக்கத்திறனும் வளர்க்கப்படுகின்றன. மாணவர்களால் பாடப்பொருளைக் காட்சிப்படுத்த முடிகிறது. ஒய்வு நேரங்களிலும் கற்றல் நடைபெறுகிறது. “மனப்பாடம்” செய்யும் நிலை மாறி கற்றலின் மீது ஒரு ஆர்வத்தை வளர்க்கிறது. ஒரு வேலையைச் செய்து முடிக்க, பல நாட்கள் பொறுமையுடன் உழைக்கின்றனர்.

(உ.ம்) சிறகுகளைச் சேகரித்து பறவைகளின் உருவங்களைச் செய்தல். ஒரு வேலை முடித்தவுடன் அடுத்த செயல்பாட்டிற்குத் தயாராக உள்ளனர். குழு கற்றலுக்கும் சக மாணவர்களிடமிருந்து கற்றலுக்கும் அதிக வாய்ப்புகள் உள்ளன.

ஒரு பாடலை நடத்துவதற்கு ஒரு சார்ட் தாளில் அந்த பாடலை எழுதி, ஓரிரு விளக்கப்படங்களைக் கேளிச் சித்திரங்களாக வரைந்து சுவரில் ஒட்டி விடுவேன். இந்த சார்ட்டைப் பார்த்து மாணவர்கள் நேரம் கிடைக்கும் போதெல்லாம், படங்களைக் கொண்டே, பாடலை நினைவு கூர்ந்து பாடியும், ஆடியும் மகிழ்வார்கள். (பாடல் இணைக்கப்பட்டுள்ளது) சுய கற்றலில் துணைக் கருவிகளின் பங்கை பறைசாற்ற இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை.

**துணைக் கருவிகளைச் செய்யும்போது கவனிக்க வேண்டியவை :**

- சுற்றுப்புறத்தில் / எளிதில் கிடைக்கக் கூடிய பொருட்களைக் கொண்டே செயல்பாடுகள் அமைய வேண்டும்.
- செயல்பாட்டு முறைகள் எளிமையாகவும் மாணவர்களால் செய்யக் கூடியவைகளாகவும் இருக்க வேண்டும்.

- செயல்பாடுகளை மாணவர்களின் பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். முடிந்த வரை இச்செயலில் அவர்களை இணைத்துக்கொள்ள வேண்டும்.
- மாணவர்களும் ஆசிரியரும் சேர்ந்து அடிப்படை பொருட்களான வண்ணங்கள், அட்டைகள், பசை போன்றவற்றை வகுப்பறையில் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும்.
- இறுதியாக, மிக முக்கியமாக, செயல்பாட்டின் ஒவ்வொரு நிலையிலும், செயல்பாட்டைத் தேர்வு செய்வதிலிருந்து, மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

**சக மாணவர்களிடமிருந்து கற்றல் :**

நான் எனது வகுப்பறையில் குழுச் செயல் பாட்டிற்கே முன்னுரிமை அளிப்பேன். பல நிலையிலுள்ள மாணவர்களைக் கலந்து குழுவாகச் சேர்க்கும் போது ஒருவரிடமிருந்து மற்றவர் கற்கும் நிலை அதிகமாகிறது. உதாரணமாக ஒரு மாணவனுக்கு ஓவியம் வரையும் திறன் அதிகமாக இருக்கும் நிலையில், மற்ற மாணவர்கள் இது போன்ற செயல்களில் அவனைச் சேர்த்துக்கொள்ள ஆர்வம் காட்டுகின்றனர். (இத்தகைய காட்சிகளைச் சாதாரண வகுப்பறைச்சூழலில் காண முடிவதில்லை). அந்த மாணவனும் மற்றவரோடு சேர்ந்து மற்ற திறன்களை வளர்த்துக்கொள்ள முயற்சி செய்கிறான்.

மாணவர்கள் தங்களின் சந்தேகங்களை களைந்து கொள்ள ஆசிரியரை அணுகுவதற்குத் தயங்குகின்றனர். ஆனால் அவர்களின் நண்பர்களுடன் வினவ அவர்கள் தயக்கம் காட்டுவதில்லை. சில சமயங்களில் அவர்களுக்குள் விவாதங்களும் நிகழ்வதைப் பார்த்திருக்கிறேன். இது ஆசிரியர் – மாணவர் இடையில் நிகழ்வது அறிது.

ஆசிரியர் அளிக்கும் விளக்கத்தை விட, சக மாணவனிடமிருந்து பெறும் விளக்கம், அவர்களின் புரிதலை எளிமையாக்குவதைக் கவனித்திருக்கிறேன். மாணவர்களின் புரிதல் நிலை ஒரே மாதிரியாக இருப்பதும் அவர்கள் அளிக்கும் உதாரணங்கள் அவர்களின் சூழலைச் சார்ந்திருப்பதுவுமே இந்த புரிதலுக்குக் காரணம் என்று நான் எண்ணுகிறேன்.

நான் ஒவ்வொரு செயல்பாட்டையும் வடிவமைக்கும் போது, மொழியின் அனைத்துத் திறன்களையும் உள்ளடக்கியதாக இருக்கமாறு பார்த்துக் கொள்வேன். அதே போல், செயல்பாடுகளை ஒரு குழு மற்ற குழுக்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறும் திட்டமிடுவேன். இத்தருணத்தில் மாணவர்கள் மற்றவர்களின் கற்றல் குறைபாடுகளை அடையாளம் காணவும் அவற்றைச் சரி செய்யவும் முயல்கின்றனர். ஒருவர் மற்றவரின் எழுத்துக்களை வாசிப்பதும், ஒருவர் கூறுவதை மற்றவர்கள் கவனிப்பதும், கருத்துக்களை விவாதிப்பதும், ஒருவர் கூறுவதை மற்றவர் குறிப்பெடுப்பதும் என அனைத்து திறன்களும் வெளிப்படும்.

இறுதியாக, இவ்வாறு முறையாகத் திட்டமிட்டு வகுப்பறையில் செயல்படுத்தும் போது கற்றல் மாணவர்களின் பொறுப்பாகிறது. நான் எளிதில் கிடைக்கக் கூடிய சாதாரண பொருட்களைக் கொண்டு எளிய செயல்பாடுகளை, மாணவர்களின் உதவியோடு செய்வதால், எந்த ஒரு சிக்கலையும் எதிர்கொள்ளவில்லை. மேலும் பெற்றோர்களின் ஒத்துழைப்பும் கிடைப்பது இரட்டிப்பு பலம்.



# Easy English Creating English Rich Environment in School

**Ramanathan V.,** H.M.
GPS Kakayanthope

**Background :**

In Pondicherry, all the government schools have been converted into CBSE system. Most students studying in government rural schools are less privileged as far as learning English is concerned. English is still an alien language in most of the rural school children of Pondicherry. There is very little exposure to English language for them. This makes it difficult for the teachers to teach the students English without the use of home language.

On a particular day, I encountered an unusual incident in a classroom. The class teacher of Standard V was on leave so I went to the class to teach. I asked a student, "Where is your book?" He did not respond as he could not understand what I was saying. Finally, he answered, "Neenga English la pesuringa" (You are speaking in English). It struck me hard and made me realize the importance of learning English to communicate and express one's thoughts and feelings.

I felt that the school should intervene in this matter to facilitate students' learning. For this, it was important to create opportunities for the students to listen to and use the target language. So I discussed about this with my school teachers and we came up with certain plans to facilitate English language learning in a natural way. We felt that the learning will be effective only when it happens in a natural, fun-filled and care free atmosphere.

How could a programme for English language learning be enjoyable at the same time be effective? In our school we teachers got together to frame an effective and systematic plan to enrich the communicative capabilities of our children. After much deliberation we came up with certain ideas that could be started straightaway; setting up of reading corners in all classes, making the daily assembly session interactive by allotting 15 min every day for developing communicative skills in children and using language games and activities based on their lessons. We wanted to keep the programme child friendly and pave the way to make English language learning stress free.

**The Four Interventions :**

As a way forward plan, the school decided to come up with four interventions which have rich pedagogical values: Reading corners, Language games and activities, Interactive morning assembly and a Print-rich environment.

**1. Reading Corner**

**Aim :** To introduce children to books and slowly develop their reading habits.

To make this program effective the books should be selected with the cognitive level of the children in mind. The books so chosen have to be graded, and arranged in tables or shelves at the eye level of the children. Some schools have even used a rope tied across the classroom and hung the books. Selection of books is important. There are plenty of illustrated books available in the market. They could be; pictorial books, bi-lingual books, story books, activity books and work books.

The reading corner is an important concept which is different from a library. The reading corner can be set up in every class. The books will be at the level of the students and they can easily pick one up and leaf through. Unlike a library, the books in a reading corner are smaller in numbers and choosing a book becomes easier for the children. Contributing books for the reading corner would be a welcome move. Once the community is sensitized to this concept there would be volunteers to contribute books to build a good collection.

Every day the teacher could allot a specific time for the children to go to the reading corner, take books, read and exchange with friends. Initially they may not read at all. Still it will give them a chance to handle a book, leaf through the pages and gaze at the pictures. Here the teacher can slowly tell them the ways to handle a book. She can sit with groups of children and talk to them about the pictures in the book. Slowly other children will warm up to her. Once they become familiar with the process the books can be issued home.



**Activities in reading corner :** Teacher can sit with the children and read aloud a story and this will be an interactive session. There are various strategies that could be used in storytelling.

**Strategy :**

Leave the story incomplete at the climax point. In the next class the children will be eager to know the continuation of the story. It will create an interactive session and a lot of talk will ensue. Slowly the vocabulary can be developed and spoken skills enhanced.

**Outcome :**

It will keep the students engaged.

Their listening skills will be enhanced.

Interest in English language will be kindled.

It will enable students to understand English in the most natural settings.

**Experience and Reflections :**

To set up a reading corner in the school, we identified a room. We brought books both Tamil and English from the Education Department. This reading corner also served as a mini library for the school. We kept story cards and books, magazines like "India Today." It was an intervention that we initiated for all the students to benefit. We had an expected result. But we felt that it was not enough. The experience made us to reflect on how we could improve our interventions. As we reflected on this, we found out that lack of proper guidelines was the major contribution to its poor result. It also made us think whether the books and other items kept in the reading corner weren't interesting enough for the children. Since the belief was strong in us to create English learning opportunities for the students, we had to come up with ways to strengthen these interventions. To support the efforts to make the reading corner effective, appropriate games and activities could be conducted to develop the interest in children towards English.

**2. Language games and activities**

It was our firm belief that English should be learnt in rich context like the first language. To create this context in the classroom and school, sufficient English inputs and exposure should be provided to the students. Under such exposure, once the students are familiar with the sounds and words of English, they will be able to start speaking in English. The students should be given ample space to use the target language, practice and master it. It is also important to note that children construct their own meaning of the world and concepts around them. Therefore our teaching methodology should respect the children's experience and base our teaching around it.

Language games and activities have multiple educational values both academic and non-academic. There are varieties of games and activities for building vocabulary, teaching concepts, grammar, stories etc. Similarly, games and activities can be used for classroom management, peer learning, interest, motivation, confidence etc. Some of them are specific for classroom usage while others can be used for language learning outside the classroom. Terms like - proper noun and common noun, pronoun etc. are taught through the language games.

**Activity :**
**Preposition :**

Materials required : Chocolates

**Procedure :** Teacher hides the chocolates behind a cupboard, under the table, on the bag, beside the table, over the shelf.

These are low cost activities that need no prior planning

**Experiences & Reflections :**


The children were initially hesitant. A few came forward and attempted to participate when the teacher explained the equivalent in their home language. Slowly they started warming up and started looking forward to the English classes. It is a great effort on the part of teachers to think of different games for the children. Sometimes when they were constrained to complete the portions and these activities may not be possible. It would be effective if teachers design activities based on the lesson and use it for assessment purposes also.

**3. Interactive Morning assembly**

Assembly can be more resourceful than what it is normally used for. We can use this space to give English inputs storytelling, learning rhymes and singing songs to the students. The teachers can take turns telling stories (bi-lingual) thrice a week or teach English rhymes and songs every day. External experts on storytelling, puppetry etc. could also be called in. At a later stage, we can introduce role plays, conduct competitions like - extempore speech, debate etc. to provide an opportunity for the students to use the target language.

**Strategy :**

Two teachers can do a role- play in English for 5 min discussing a topic closer to the children's everyday happenings. The teachers can do it for 4 days in the assembly in front of the whole school. On the 5th day volunteers can be asked to do a similar role-play for 5 minutes. The topic and the vocabulary list could be given a day before. Children can come in pairs and do the role-play.




**Outcome :**

Stage fear goes.

Children's attention span develops.

Spoken and communicative skills develop in natural settings.

Listening skills get enhanced.

Peer learning and assessment takes place.

**4. Print- Rich Environment**

The school should take an initiative to expose the students to maximum visual materials. As it is, students like to draw and express their thoughts through drawing. It takes only a simple effort for the teachers to make sure that these drawings can be utilized for teaching the target language. The teacher can also use the concept of "Graffiti Wall" where the students' own creations - vocabularies, language games and activities, can be drawn, pasted or hung on. The teachers and students can collaboratively paint and make some posters (which have the target language written on them), collect locally available authentic materials like news- papers, empty cartons of food products, wrappers of chocolates and so on and create stories and songs. This intervention will provide the students to get familiar with the written language.

**Way Forward :**

To sharpen our next interventions, it is essential to have proper plan with clear cut objectives behind it. These are a few interventions the school has

developed. The school will explore other opportunities to create English rich environment, which will serve two main purposes:

(i) Creating varied **input** rich environment that is, the students be given plenty of verbal and written opportunities to become familiar with the target language.

(ii) Providing sufficient opportunities for **output** that is, space for the students to use the target language.

*This Article was presented by Mr. V. Ramanathan at the 'Medayil Thisaimaani' seminar in October 2014. We are presenting to you the full version of this article in this issue. We extend our heartfelt condolences to his family and friends on his untimely demise. Through this article, we hope to join his fellow teachers and students in continuing the efforts he started during his lifetime.*



# என் ஆசிரியப் பணியில் மறக்கமுடியாத நிகழ்வு...

**அ. பச்சைநாயகம்**, முதல்வர்,
இந்திராகாந்தி அரசு மேல்நிலைப்பள்ளி, இந்திரா நகர், புதுச்சேரி.

என் ஆசிரியப் பணியின் இறுதி ஆண்டு இது. கடந்த 35 ஆண்டுகளில் மேல்நிலைப்பள்ளியில் வெவ்வேறு பொறுப்புகளில் பணியாற்றி வந்திருக்கிறேன். விரிவுரையாளராக 23 ஆண்டுகள், துணை முதல்வராக 8 ஆண்டுகள் பணியாற்றிய நான் தற்பொழுது 5 ஆண்டுகளாக முதல்வராக பணியாற்றி வருகிறேன். இத்தனை ஆண்டுகளில் பல மாணவர்கள் என்னிடம் படித்தாலும், அவர்களை நினைவில் வைத்துக்கொள்வது சிரமமான விஷயம். ஆனால் அவர்களோ நம்மை மீண்டும் சந்திக்கும்போது, எளிதாக அடையாளப்படுத்தி, "இவர் என் ஆசிரியர்" என்று பெருமையாக மற்றவர்களிடம் கூறுவார்கள்.

விரிவுரையாளராக இருந்தபொழுது, பொருளாதார பாடத்தை மாணவர்களுக்கு பயிற்றுவிப்பேன். பொருளாதாரம் போன்ற பாடங்களை மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ள பாடத்தை வாழ்வியலோடு தொடர்புப்படுத்தி சொல்லிக்கொடுப்பேன். உதாரணமாக மாணவர்களிடம் "உன் அம்மா, உன்னிடம் 10 ரூபாய் கொடுத்து 1 கிலோ தக்காளி வாங்கிவரச் சொல்கிறார். கடையில் 1 கிலோ தக்காளி 5 ரூபாய் விற்றால் எத்தனை கிலோ வாங்குவாய், 2 ரூபாய் விற்றால் எத்தனை கிலோ வாங்குவாய் என்று கேட்பேன்" இவ்வாறாக ஒரு பொருளின் விலைகுறையும் போது, நாம் அதை அதிகமாக பயன் படுத்துகிறோம் என்று 'தேவை விதியை'



(Law of Demand) விளக்குவேன். மாணவர்களை மதிப்பெண் வாங்கும் இயந்திரமாக எண்ணாமல், அவர்கள் பாடத்தைப் புரிந்து படிக்கிறார்களா என்பதில் அக்கறையோடு இருப்பேன்.

பாடத்திட்டம் தவிர மாணவர்களின் மற்ற திறன்களை வளர்க்க வேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்தது. ஒரு பள்ளியில் நான் முதல்வராக பணியாற்றியபோது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் படைப்புகளை "ஆங்கில இலக்கிய சங்கம்" நிறுவி "லிட்ரா *(LITERA)*" என்ற வருடாந்திர இலக்கிய பத்திரிக்கை வெளியிட உறுதுணையாக இருந்தேன். மூன்று ஆண்டு காலம் நாட்டு நலப்பணித் திட்டத்தில் பணியாற்றிய போது, கிராமப்புறங்களில் சென்று சமூக சேவையில் ஈடுபடுவது மற்றும் மாணவர்களுக்கான வாழ்க்கைக்கல்வி போன்ற நிகழ்ச்சிகளை அர்த்தமுள்ள வகையில் செயல்படுத்த முயற்சித்தேன். இது அவர்களை முழுமையாக அறிந்து கொள்ளவும் கல்வியில் பின்தங்கிய மாணவர்களை ஊக்கப்படுத்தி தேர்வில் வெற்றி பெறச் செய்யவும் மற்றும் மாணவர்கள் அவர்களின் பாட சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளவும், நட்புரீதியாக என் வீட்டிற்கு வந்து போகவும் உதவியாக இருந்தது.

அப்போது ஒரு மாணவன், அவனின் செயல் பாடுகளினால் என் மனதில் நின்றான். அவன் நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவன். அவனுடைய விடாமுயற்சி, தன்னம்பிக்கை, மற்றவர்களுக்கு உதவும் பண்பு என்னை மிகவும் கவர்ந்தது. பொதுவாக மாணவர்களின் தேர்வுத் தாள்களை தேர்வு முடிந்தவுடன் உடனே திருத்திக் கொடுத்து விடுவேன். இது அவர்களின் தவறுகளை உடனே அறிந்துகொள்ள உதவும். இந்த மாணவன் ஒருபடி மேலாக என் வீட்டிற்கே வந்து விடைத்தாளை பெற்றுக்கொள்வான். இது அவனுக்கு கல்வியில் இருந்த ஆர்வத்தைக் காட்டியது. இது போல மற்ற மாணவர்களும் இவ்வாறு செயல்பட அவன் காரணமாக இருந்தான். மேலும் அவன் என் வகுப்பில் சிறந்த மாணவனாக திகழ்ந்து தேர்ச்சிப் பெற்றான். இந்த மாணவன் என்னிடம் படித்து 35 ஆண்டுகள் கடந்துவிட்டன. இருந்தாலும் அவன் என் நினைவிலிருந்து நீங்கவில்லை.

சமீபத்தில் 2011-ம் ஆண்டு நான் மீண்டும் பதவி உயர்வு பெற்று காரைக்காலில் உள்ள ஒரு பள்ளிக்குச் சென்றேன். அப்போது ஒருநாள் ஒரு பள்ளி விழாவில் என்னிடம் 35 ஆண்டுகளுக்கு முன்பு பயின்ற அந்த மாணவரை மீண்டும் சந்தித்தேன். அவர் என்னை அடையாளம் கண்டுக்கொண்டு "இவர் என் ஆசிரியர்" என மற்றவர்களிடம் கூறினார். இது எனக்கு மிகவும் ஆச்சரியமாகவும், பெருமைக்கொள்ளும் விதமாகவும் இருந்தது. அவரைப்பற்றி மேலும் விசாரித்தபொழுது அவர் காரைக்காலில் தொழில் அதிபராகவும், அரசியலில் முக்கியப் பொறுப்புகளிலும், சமூக ஆர்வளராகவும் இருப்பதாக கூறினார்கள். மேலும் நான் அங்கு தங்கி மூன்று ஆண்டு காலம் பணிபுரிவதற்கு பேருதவியாகவும் இருந்தார். மேலும் அங்கு நடைபெற்ற ஒருவிழா கூட்டத்தில் தன்னுடைய உயர்வுக்கு நான் தான் காரணம் என்று கூறி என்னை கௌரவித்தார். 2006 ஆம் ஆண்டு சிறந்த ஆசிரியருக்கான புதுவை அரசின் "மாண்புமிகு கல்வி அமைச்சர் பிராந்திய விருது" எனக்கு கிடைத்தது. இருந்தாலும் மாணவர்களும், பெற்றோர்களும் என்னை பல இடங்களில் சந்திக்கும் போது "இவர் என் ஆசிரியர்" என்று குறிப்பிடும் போது பல விருதுகள் பெற்றதாக உணர்வேன். இதுபோன்ற மக்களின் அன்பும், அரவணைப்பும், மதிப்பும், மரியாதையும் ஆசிரியர் பணியைத் தவிர மற்ற பணிகளில் கிடைக்குமா என்பது சந்தேகம்தான்.




# என் ஆசிரியப் பணியில் மறக்கமுடியாத நிகழ்வு...

ர. சங்கர், PST, அரசு தொடக்கப்பள்ளி
தட்டாஞ்சாவடி (வி)

காவல் துறையிலிருந்து ஆசிரியர் பணிக்கு வந்தவன் நான். இளநிலைக் கல்வியியல் முடித்திருந்ததால், ஆசிரியப் பணிக்கான தாகம் அதிகமாக இருந்தது. அதனால் எனக்கு ஆசிரியப்பணி கிடைத்த பொழுது பெருமகிழ்ச்சியாக இருந்தது. அதோடு என் வேலை, விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீட்டில் பெறப்பட்டது. எனக்கும் விளையாட்டுக்கும் மிகப்பெரிய தொடர்பு உள்ளது. அதே போல் குழந்தைகளுக்கும் விளையாட்டுக்கும் மிகப்பெரிய தொடர்பு இருப்பதை நான் அறிவேன். குழந்தைகளின் கற்றலில் விளையாட்டை இணைத்தல் மற்றும் விளையாட்டை ஒரு முக்கியமான கல்வியாக அங்கீகரித்தல் என்பதுபற்றி எனக்கு விதம் விதமான கனவு உண்டு. இக்கனவு செயலாக்கம் பெறுமிடமாக பள்ளி மைதானமும் வகுப்பறையும் இருந்து வருகிறது. காவலர் பணிச்செயல்பாடுகளைக் குழந்தைகளுக்கேற்ப செயல்படுத்தும் பொழுது நல்ல மாற்றம் தருவதைப் பார்க்கிறேன். செயல்பாடுகளில் குறிப்பாக உடல் ரீதியான செயல்பாடுகள் குழந்தைகளைக் கவர்கின்றன. அதிலும் அவை வித்தியாசமானதாக இருக்கும்பொழுது, அவர்களை மதிப்பதாக இருக்கும் பொழுது அவர்கள் விருப்பத்தோடு செய்வதாக மாறுகிறது.

எங்கள் பள்ளியில் தினமும் மாணவர்களை நான்கு முறை மைதானத்தில் கூட்டும் வழக்கம் உண்டு. காலை வணக்கத்திற்காக, இடைவேளைக்குப் பிறகு, மதிய உணவிற்குப்பின், வீட்டிற்கு செல்லும்பொழுது என எல்லோரையும் ஒருங்கிணைத்து வகுப்பிற்கும் வீட்டிற்கும் அனுப்புவோம். அப்படி செய்யும்பொழுது வகுப்பறையில் மாணவர்களிடம் பாடத்தைத் துவங்க வசதியாக இருக்கும். அக்கூடுகையை என்பாணியில் கீழ்கண்டவாறு ஒழுங்கமைத்துள்ளேன்.

ஒவ்வொருமுறை மணி அடித்ததும், ஒருநிமிட இடைவெளியில் இரண்டு விசில் அடித்துப் பின் நீளமான விசிலடிப்பேன். அந்தநீளமான விசிலில் அவர்கள் அமைதியாகி மைதானத்தில் அவரவர்கள் இடத்தில் கூடுவர்.



அடுத்த விசில் அடித்தவுடன்,

left right left
Right Left right
OK sir
We are ready
(They will repeat the above in a chorus)

என்று ரைமிங் ஆகக் கூறி முடிப்பார்கள். பின் பள்ளியின் வழக்கமான நிகழ்வுகளான காலை வணக்கக் கூட்டம் துவங்கும். இச்செயல்பாடு குழந்தைகள் அவ்வொழுங்கை மதித்து தொடர்ந்து செய்வதும், விரும்பி செயல்படுவதும் நமக்கு ஒரு நிறைவை ஏற்படுத்துகிறது. அழகான மற்றும் முறையான செயலில் ஈடுபட்ட உணர்வை குழந்தைகளிடம் ஏற்படுத்துகிறது.

இதோடு காலை மாலை இருமுறையும் 6 உடற்பயிற்சிகளை அனைத்துக் குழந்தைகளையும் செய்ய வைப்பேன். இப்பயிற்சிகள் குழந்தைகளின் உடல் பொது ஆரோக்யம் மற்றும் அவர்களது உள் ஆரோக்யத்தை ஒருங்கமைக்க உதவியாக இருக்கும்.

விளையாட்டு என்பதை ஒரு முறையான பாடமாக குழந்தைகளிடம் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். ஏனெனில் விளையாட்டு குழந்தைகளிடம் வெவ்வேறு விதமான ஆளுமையை உருவாக்குகிறது, என்பது என் நம்பிக்கை. ஆரம்பப் பள்ளியில் அவர்களுக்குத் தவளை ஓட்டம், பந்து எரிதல், வாத்து ஓட்டம், கற்கள் சேகரித்தல் போன்ற விளையாட்டுகளை விளையாடப் பயிற்சி அளிப்பேன். எப்பொழுதும் இவற்றை என் வகுப்புக் குழந்தைகளுக்கு என்றில்லாமல் அனைத்து குழந்தைகளுக்கும் செய்வதுண்டு.

என் வகுப்பறையில் பாடத்தை சிறப்பாக நடத்தவும் குழந்தைகள் சுலபமாகப் புரிந்துகொள்ளவும் இரு விதமான விளையாட்டுகள் உதவியாக இருக்கின்றன.

அவை பாடத்தைக் கவனிப்பதற்காக நான் அவர்களுடன் இணைந்து முடிவெடுக்கும் விளையாட்டு. அது அவர்கள் பாடத்தை, அதிலுள்ள விஷயங்களைக் கவனித்து புரிந்துப் பதிலளித்து... என்பதாக இருக்கும். எல்லோரும் கற்றால், கற்றல் முடிந்தவுடன் நானும் அவர்களும் மைதானத்திற்கு சென்று விளையாடும் விளையாட்டு. இவ்விளையாட்டைப்பற்றி பாடம் துவங்குவதற்கு முன்பே விவாதிப்போம். மாணவர்கள் தேர்ந்தெடுக்கும் விளையாட்டாக அது இருக்கும். அது விளையாடும் முறையை மாணவரே விளக்குவர். அவர்களே ஒழுங்கமைப்பர். கண்ணாமூச்சி ரே ரே, பூப்பறிக்க வருகிறோம் என்பது போன்ற நாட்டுப்புற விளையாட்டுகளாக அவை இருக்கும். இதற்கான புத்தகங்களும் என்னிடம் உள்ளது.

மற்றொன்று பாடத்தோடு அல்லது பாடத்தினை மாணவர்கள் புரிந்துகொள்வதற்கானது. அய்ந்தாம் வகுப்பு ஆசிரியனாக என் மொழிப்பாடத்தை நடத்தி முடித்ததும் அப்பாடத்திலுள்ள திறன்களை வளப்படுத்த நான் கையாளும் யுத்திகள் சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இருகுழுக்களாக மாணவர்களைப் பிரித்து "வார்த்தைப் பந்து எரிதல்" விளையாட்டை விளையாட வைத்தல், அதாவது ஒரு குழு மாணவர்கள் ஒரு ஆங்கில வார்த்தையை சத்தமாக சொல்லிப் பந்தை எறிவதுபோல் பாவனைக் காட்டுவர். அவர்கள் எறிந்த அந்த வார்த்தையைப் பிடிப்பது போல் பாவனை செய்து அதற்கான அர்த்தத்தை எதிர்குழுவினர் சொல்வர். இதுபோன்று எதிர்ப் பத வார்த்தைகளைப் பழகுவதற்கு குழு எறிந்த வார்த்தையைப் பிடிக்காமல் திருப்பியடிப்பது போல் பாவனைக்காட்டி எதிர்ப் பத வார்த்தையை உறக்கச் சொல்வர். இப்பயிற்சிகளுக்கான பாவனை விளையாட்டுகளில் கிரிக்கெட் விளையாட்டிற்கான நுட்பங்கள் இணைந்தே இருக்கும். வாய்ப்பாடு மனப்பாடம் செய்யக் கபடி விளையாட்டின் கபடிக்கபடி ஓசை உதவியாக இருக்கும். 5x8=40 என ஒரு குழு சொல்லும். எதிர்க்குழு "கபடி கபடி கபடி" என பின் பாட்டு பாடுவர். ஆங்கில ரைமிங் வார்த்தைகளுக்கு கொக்கோ விளையாட்டின் கோ கோ என்ற ஓசையைப் பயன்படுத்துவேன். உதாரணத்திற்கு Done என்று ஒரு குழு ஒரு ரைமிங் வார்த்தையை சொல்வர் எதிர்க்குழு கோ கோ என்று சொல்வர். மீண்டும் முதல் குழு Ton என்ற வார்த்தையை உச்சரிப்பர். அடுத்து எதிர்குழு தனக்கான ரைமிங் வார்த்தையைத் துவங்கும். இவ்வாறு வெவ்வேறு விளையாட்டுகளைப் பயன்படுத்திப் பார்ப்பது எனக்குப் பிடித்தமானதாக இருப்பதோடு மாணவர்களும் மகிழ்ச்சியான கற்றலிலீடுபடுவர். இக்குழு செயல்பாடு மற்றும் விளையாட்டு முறைகள் பாடத்திலுள்ள திறன்களில் புரிதலை ஏற்படுத்தி அவர்கள் அதில் ஈடுபாட்டுடன் செயல்பட அவர்கள் அதை உள்வாங்கி மறந்துவிடாமல் இருக்க உதவியாக இருக்கிறது.

குழந்தைகளின் ஒவ்வொரு திறமையை வளர்க்கவும் ஆசிரியரின் உத்தி என்பது முக்கியமானதாக இருக்கிறது. அவ்வுத்திகளை நாம் கண்டு பிடிக்கும்பொழுது நமக்குக் கிடைக்கும் மகிழ்ச்சி என்பது அளவிடற்கரியதாக இருக்கிறது. வகுப்பறையில் ஆசிரியராக இருக்கும் வாய்ப்பு என்பது வாழ்க்கைக்கான அர்த்தத்தை ஏற்படுத்தக் கூடியதாக நான் உணர்கிறேன்.

# Teacher Forum Updates

**History - Teaching the 1857 Rebellion :** Discussion on developing lesson plan on 1857 Rebellion. Objectives of history teaching in the upper primary stage, how can different sources be used in history teaching and multiple perspectives involved in different historical incidents.

**English - Interactive classroom practices:** Discussion on interactive classroom practices in English language teaching was conducted on 3rd and 5th of January. The methods developed by educationist Jane Sahi in her school in North East Karnataka were taken up for discussion. Key areas of discussion of the day included experiential leaning, using authentic materials to teach English in school and developing engaging activities for the English classroom.

**Tamil language - Collaborative action research group :** Meeting of the language teachers' group to select materials for assessing students' reading abilities; teacher workshop for sharing their experiences and challenges faced during the base lining process.



**Primary Science The mystery of the flying tea bag :** Discussion on the topic of 'Air and Wind' which is dealt in the third trimester of grade 3.Demonstration of different experiments to explain concepts like - why hot air rises, how land and sea breezes occur, properties of air - were carried out. Key discussion points of the session included the importance of designing and demonstrating




experiments and involving students in the process of science teaching.

**Book review Ayeesha :** Second meeting of the Lawspet Teachers' Book review club. Teacher review of book 'Ayeesha' followed by discussion on issues like student motivation, classroom management, girls' education etc.




# New arrivals - Teachers' Resource Center

***Here are some new arrivals at the Teacher Resource Center, Azim Premji Foundation. To access these new resources please visit/call us at our address.***



1. **Title : Geometry**
   **Author : Roger A Fenn**
   **Publisher : Springers**


Geometry is probably the most accessible branch of mathematics, and can provide an easy route to understanding some of the more complex ideas that mathematics can present. This book is intended to introduce readers to the major geometrical topics taught at school level, in a manner that is both accessible and rigorous.




2. **Title : Practical English Language Teaching**
   **Editor : David Nunan**
   **Publisher : McGraw Hill**

The book is designed for both experienced teachers and those who have only just entered the profession. It will update the experienced teacher on current theoretical and practical approaches to language teaching. The novice teacher will find step-by-step guidance on the practice of language teaching.

3. **தலைப்பு : வரலாறும் கருத்தியலும்**
   **ஆசிரியர் : ரொமிலா தாப்பர்**
   **தமிழாக்கம் : ஆ. இரா. வேங்கடாசலபதி**
   **வெளியீட்டாளர் : National Book Trust**



பண்டைய இந்திய வரலாற்றை முற்போக்கு எண்ணமுடைய இந்திய வரலாற்று ஆசிரியர் எப்படி அணுகலாம் என்பதைப் பற்றிய நூல். படிப்பதற்கு எளிதாக படைக்கப் பட்டிருக்கிறது. எளிமையான முறையில் விவாதங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. வரலாற்றை முழுமையாகப் பார்ப்பது உண்மையாகப் பார்ப்பது என்றால் எப்படி என்பதை விளக்கும் ஆசிரியர்களுக்கு உணர்த்தும் புத்தகம். ரொமிலா தாப்பரின் ஒரு புத்தகத்தை உள் வாங்கிப் படிக்கும் ஒவ்வொரு வரலாற்று ஆசிரியரும் ஆய்வாளரும் தன் பார்வையில் பெரும் மாற்றத்தைப் பெற்றிருப்பதோடு அவரது மற்ற புத்தகங்களையும் தேடிப் படிக்கும் உணர்வைப் பெறுவர். அது மட்டுமல்ல அவர்கள் வரலாற்றை அறிந்து நடத்தும் பொழுதும் வரலாறுச் செயல் பாடுகளிலும் அதன்



4. **Title : Active Physics - An inquiry approach to Physics**
   **Author : Dr. Arthur Eisenkraft**


Active Physics is an inquiry based approach to physics where students learn science the scientist way. Each chapter poses a challenge that students are expected to solve using the knowledge gained from the chapter. Asking questions, digging deeper and inquiring further is what this book is all about.

5. **Title : Amar Chitra Kadhai (Series in Tamil)**
   **Publisher : Amar Chitra Katha**



A series of comic books on mythology, Panchatantra tales, folk tales, great personalities and wisdom stories. The all-time favourites of children and adults alike, Amar Chitra Katha (ACK) comics have now entered the Tamil Nadu market - in Tamil language. Local language enable faster absorption by the younger generation.

# குறிப்புக்காக



## பெட்ரண்ட் ரஸல் பேசுகிறார்

கல்வி உள்ளுணர்வுகளை வளர்த்தெடுக்க வேண்டும். அவற்றை அமுக்கிவைக்கக்கூடாது. மனிதனின் உள்ளுணர்வுகள் தெளிவற்றவை. அவற்றைப் பல வழிகளிலும் திருப்திப்படுத்தலாம். பெரும்பாலான உள்ளுணர்வுகளைத் திருப்திப்படுத்த, ஏதேனும் ஒரு தனித்திறமை வேண்டும். ஒரே உள்ளுணர்வை கிரிக்கெட்டோ, பேஸ்பாலோ திருப்திப்படுத்தலாம். ஆனால் பையனுக்கு எது தெரியுமோ, அதை விளையாடுகிறான். எனவே, குண நலன்களைப் பொறுத்தவரை தன் உள்ளுணர்வைப் பயனுள்ள வகையியல் திருப்திப்படுத்தும் வகையில் சில திறமைகளைக் கற்றுத்தருவது போதிப்பதின் ரகசியம். சிறுவயதில் அரக்கனோடு தன்னைப் பொருத்திப் பார்த்து அதிகாரத்திற்கான தனது உள்ளுணர்வைத் திருப்திப்படுத்திக் கொள்ளும் குழந்தை, பெரியவனாகும் போது ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பு போன்ற எத்தனையோ ஆயிரக்கணக்கான வழிகளில் அதைத் திருப்திப்படுத்திக்கொள்ளும். இந்த அதிகாரத்திற்கான ஆசையை முளையிலேயே கிள்ளிவிட்டோம் என்றால், மிகவும் சோம்பேறியாய், எதுவும் செய்யாமல் மந்தமாகி விடுவார்கள். இதுபோன்ற ஒரு ஜீவனற்ற நற்குணம் இவ்வுலகிற்குத் தேவையில்லை. அப்படிப்பட்ட குழந்தைகளை நாம் உருவாக்கக்கூடாது. அவர்கள் மிகச்சிறுவனாக இருக்கும்போது, கற்பனையில் நமது காட்டுமிராண்டிகளான முன்னோர்களின் வாழ்க்கையைத்தான் வாழ்கிறார்கள். நல்ல பண்புகளுக்கான அறிவையும், திறமைகளையும் அவர்களுக்குத் தந்தால், அவர்கள் அதிலிருந்து வெளியே வருவார்கள்.



## பேராசிரியர். D.S. கோத்தாரி (1906 - 1993)

"ஆசிரியர்களின் வேலையானது பாட புத்தகத்தில் இருக்கும் செய்தியை அப்படியே மாணவர்களிடத்தில் கடத்துவது என்பதல்ல. வெறும் தகவல்கள் வெகு சீக்கிரம் பழைய செய்திகளாகியும் விடும். பாடத்தின் ஆழத்தை உணரும் ஆசிரியரால்தான் அக்கருத்தை மாணவர்களின் உணர்வுகளிலும் கலக்கச் செய்ய முடியும் அப்படி மாணவர்களின் உணர்வுகளில் கலந்துவிட்டப் பாடக்கருக்கள் அவர்களின் ஆளுமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், சமூக மாற்றத்திற்கும் வழி வகுக்கும். ஆகவே ஒரு ஆசிரியரின் வாழ்நாள் பணியானது தன்னுடைய மாணவர்களின் வழியாக சமூகத்தை மேன்மையடையச் செய்வதாக இருக்க வேண்டும்" என்று சொன்ன கோத்தாரி, கல்வி வளர்ச்சியில், அளவையும் தரத்தையும் மேம்படுத்த இந்திய அரசுக்கு ஆலோசனைகள் அளித்திடும் நோக்கத்தோடு 1964ம் ஆண்டு ஜூலை மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மூலம் உருவாக்கப்பட்ட "கோத்தாரிக் கல்விக் குழு"வின் தலைவராய் இருந்து செயல்பட்டவர்.

தன் பள்ளிக் கல்வி தொடங்கி கல்லூரிக் காலம் வரை கல்வியில் முதல் நிலை மாணவராக திகழ்ந்த கோத்தாரி, பிற்காலத்தில் இயற்பியல் துறையில் ஆழக்காலூன்றி பேராசிரியராக உருவெடுத்தார். தன் வழிகாட்டுதலின் பேரில் ஆயிரக்கணக்கான மாணவர்களை அறிவியல் துறையில் உருவாக்கினார். இது ஒரு புறம் இருப்பினும், இவர் தலைமையில் தொடக்கக் கல்வி முதல் பல்கலைக்கழக கல்வி வரை இந்தியக் கல்வியின் அனைத்து நிலைகளிலும் உள்ள அனைத்து பிரச்சனைகளையும் ஆராய்ந்து, அதற்கான உரிய தீர்வுகளை அரசுக்கு "கோத்தாரிக் கல்வி குழு"வின் மூலம் பரிந்துரைத்தார் இப்பரிந்துரையே இந்தியக் கல்வித் திட்டத்தின் போக்கை மாற்றுவதற்கு பேருதவி புரிந்திருக்கிறது.

**AZIM PREMJI FOUNDATION**
Puducherry District Institute
#5 Nessa Illam, PSCB Nagar, Opp. to RTO Office
Puducherry - 605 004
Land Phone : 0413 - 2355085
www.azimpremjifoundation.org

**Send us your articles and feedback:**
**thisaimaani@azimpremjifoundation.org**
**9597776719**
**9500400446**

MOTHER'S GRACE 0413 2336204